# முன்னுரை

பல கண்டங்கள், பல தேசங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள், பலவிதமான பாரம்பரியங்கள் இவைகளால் வேறுபட்ட சூழ்நிலைகளில் பிறந்து வளர்ந்தாலும் இயேசுவால், மறுபிறப்பின் அனுபவத்தால், தேவனுடைய பிள்ளையாக, ஒரே பரலோக குடும்ப உறுப்பினர்களாக மாற்றப்பட்டுள்ளோம். இந்த மேலான நிலையானது, யோவேல் 2:21 "தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்", ஏசாயா 9:2 "இருளில் இருக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்", ஏசாயா 7:14 "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்", ஆதியாகமம் 3:15 "உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார்" இந்த வசனங்களின்படி முதல் மனிதன் ஆதாமுக்கும், யூத மக்களுக்கும் வாக்களிக்கப்பட்ட மேசியாவான இயேசு 2000 வருடங்களுக்கு முன்பு பூமிக்கு வந்து நமக்கு பணிவிடை செய்கிறவராக, அடிமையாக வந்து அவருடைய சிலுவை, பாடு, மரணம், உயிர்த்தெழுதல் மூலம் புற இனத்தவராகிய நமக்கு இலவசமாய் கிடைத்துள்ளது.

இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு வாழ்கிறவர்கள் ஒரு பொற்காலத்தில் அதாவது இழந்துபோன ஏதேன் வாழ்வில் வாழலாம். இதற்கு சத்தியத்தை அறிந்து கொள்வதும், அதை முழுமையாக விசுவாசிப்பதும், அதை பூமியில் செயல்படுத்துவதும் அவசியமாகும்.

இந்த புத்தகத்தை இந்த பூமியில் மேலான வாழ்வை அனுபவிக்கவும், அதே சமயம் தேவனுடைய இதயத் துடிப்பை உணர்ந்து நமது பணம் தவறான விதத்தில் சாத்தானுடைய ஊழியத்திற்கு சென்றுவிடாமல், மிகத் துல்லியமாக தேவனுடைய ராஜ ஜியத்திற்கென்று செலவிடப்படவும் வேண்டும் என்ற நோக்கத்தோடு பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலோடு ஜெபத்தோடும், தேவ பயத்தோடும் எழுதியுள்ளேன். இந்த புத்தகத்திலுள்ள காரியங்களைக் கருத்தாய் வாசித்தால் உங்களுக்குண்டான கிருபை இன்னும் பெருகி, உங்கள் அபிஷேகம் போதிக்கிறபடியே, இப்போது நீங்கள் ஊழியத்திற்கு என்று செலவிடுவதை விட இன்னும் சிறப்பாக, சரியாக, உற்சாகத்தோடு சுயாதீனமாக செலவிட்டு பரிபூரணமும், பாலும் தேனும் ஓடுகிற வாழ்வை அனுபவிப்பீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

தொடர்ந்து வாசியுங்கள்......

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் சகோதரன்
**எஸ். பிரான்சிஸ்**

# புதிய ஏற்பாட்டில்
# தசமபாகம்

தசமபாகம், காணிக்கை இவைகளை வேத வசனத்திலிருந்து தியானிப்பதற்கு முன்பாக நாம் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொள்ளும் பொழுது நாம் யாராக இருக்கிறோம்? நாம் என்னவாக இருக்கிறோம்? என்பதை வேத வசனத்திலிருந்து உறுதி செய்து கொள்வது மிகவும் நல்லது,

பரலோக தேவன் தனது ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கும், மனிதனுடைய பாவங்கள், சாபங்களுக்கு பரிகாரமாகவும், இயேசு கிறிஸ்துவை இந்த பூமிக்கு தந்தருளினார். இந்த இயேசு சுமார் 2000 வருடங்களுக்கு முன்பாக பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததினிமித்தமும், இவர் செய்த செயல்களினிமித்தமும் மனித குலத்துக்கு கிடைத்த இலவச ஆசீர்வாதம், நன்மைகளை அறிவிப்பதே கிறிஸ்தவ சுவிசேஷம் அல்லது நற்செய்தியாக இருக்கிறது.

**இந்த இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இஜ்ட்சகராக, ஆண்டவராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய இலவச ஆசீர்வாதங்கள் :-**

### 1.நித்திய ஜீவனை பெறுகிறார்கள், நரகத்தின் பிடியிலிருந்து மீட்படைகிறார்கள்.

**யோவான் 3:16.** தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

**யோவான் 6:27.** அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.

**யோவான் 8:12.** நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

**யோவான் 8:51.** ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**யோவான் 14:6** நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

### 2.யெகோவா தேவனுடைய பிள்ளைகள் (யெகோவா தேவனுக்கு சாட்சிகள் மட்டும் அல்ல)

**யோவான் 1:12.** அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

**ரோமர் 8:14.** மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

**கலாத்தியர் 4:7** இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.

**3.நீதிமான்கள்**

ரோமர் 3:23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு **நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;**

2கொரி 5:21. நாம் அவருக்குள் தேவனுடைய **நீதியாகும்படிக்கு**, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

ரோமர் 5:1. நாம் விசுவாசத்தினாலே **நீதிமான்களாக்கப்**பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

ரோமர் 9:30 நாம் என்னசொல்லுவோம்? **நீதியைத்** தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்; அது **விசுவாசத்தினாலாகும் நீதியே.**

**4.பரிசுத்தவான்கள்**

எபி.10:10 இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் **பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.**

அப்போஸ்தலர் 15:9 விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் **சுத்தமாக்கி** (பரிசுத்தமாக்கி), நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.

அப்போஸ்தலர் 26:18 அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே **பாவ மன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய** சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.

**5.பரிபூரணமானவர்கள்**

எபி.10:14 பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.

கொலே.1:19 சகல **பரிபூரணமும்** அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,

கொலே.2:9-10 ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலை வராயிருக்கிற அவருக்குள் நீங்கள் **பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.**

**6.கறை திரை பிழையில்லாதவர்கள்**

எபே.5:27 **கறைதிரை** முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றது மான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

**7.புது சிருஷ்டிகள்**

2கொரி.5:17 ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

**8.சுதந்திரவாளிகள்**

ரோமர் 8:17. நாம் பிள்ளைகளானால் **சுதந்தரருமாமே;** தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு **உடன் சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

கலா.4:4-7 நாம் **புத்திரசுவிகாரத்தையடையும்படி** நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப் பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்க தாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாய் இராமல் **புத்திரனாயிருக்கிறாய்;** நீ **புத்திரனேயானால்**, கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய **சுதந்தரனாயுமிருக்கிறாய்.**

## 9.தேவனுடைய ஊழியர்கள்

வெளி.1:6. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக **நம்மை ராஜாக்களும் ஆசாரி யர்களுமாக்கின** அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

எபி.9:13-14 காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப் படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு **ஊழியஞ்செய்வதற்கு** உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

1பேதுரு2:8-9. திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற் கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை **அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும்,** பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

2கொரி.6:1. தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, **உடன் வேலையாட்களாகிய** நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.

எபேசி1:23. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

எபி.5:4-5 ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரி யராயிருக்கிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்.

எனவே, நாம் இயேசுவோடு இணைக்கப்பட்டபடியாலே இயேசு தலையாகவும், நாம் அவர் உடலாகவும் இருக்கிறபடியால் **நாமும் ஆரோனைவிட மேலான நிலையில் தேவனால் அழைக்கப் பட்ட, அபிஷேகம்பண்ணப்பட்ட ஊழியர்களே.**

## 10.ஸ்தானாதிபதிகள்

2கொரி 5:20 (அம்பாசிடர்) தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக **ஸ்தானாபதிகளாயிருந்து**, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

எபேசி 6:19. சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற **ஸ்தானாபதியாகிய** நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக,

பிலிப் 2:25. என் சகோதரனும், உடன்வேலையாளும், உடன்சேவகனும், உங்கள் **ஸ்தானாபதியும்**, என் குறைச்சலுக்கு உதவிசெய்தவனுமான எப்பாப்பிரோ தீத்துவை உங்களி டத்தில் அனுப்பவேண்டுமென்று எண்ணினேன்.

நாகூம் 2:13 .......**உன் ஸ்தானாதிபதிகளின்** சத்தம் இனிக் கேட்கப் படுவதில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

### 11.சாத்தான் மேல் அதிகாரம் பெற்றவர்கள்

லூக்.10:19 சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு **அதிகாரங்கொடுக்கிறேன்;** ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

சங்.8:2 பகைஞனையும் பழிகாரனையும் **அடக்கிப்போட,** தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

சங்.91:13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் **மிதித்துப் போடுவாய்.**

யாக்.4:7 ....தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு **எதிர்த்து நில்லுங்கள்,** அப்பொழுது அவன் **உங்களைவிட்டு ஓடிப்போவான்.**

1பேதுரு.5:9 விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு (பிசாசுக்கு) எதிர்த்து நில்லுங்கள்;

### 12.இரத்தக்கிரயத்தால் மீட்கப்பட்டவர்கள்

1கொரி.6:20. **கிரயத்துக்குக்** கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

1பேதுரு1:18.19 உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற **இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.**

### 13.நியாயப்பிரமாண சட்டத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள்

எபே.2:15 **சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து**, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,

ஒழித்தார் என்ற வார்த்தைக்கு Katargeho (Kat-arg-eh-o) என்ற கிரேக்க வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு abolish, cease, cumber, deliver, destroy, do away, become (make) of no (none, without) effect, fail, loose, bring (come) to nought, put away (down), vanish away, make void, என்று Strong's Greek & Hebrew dictionary-யில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

கொலே.2:16 நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து (நியாயப்பிரமாணத்தை குலைத்து அல்லது ஒழித்து), அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;

ரோமர்10:4 விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

**கலாத்.**3:13. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, **நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு** நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.

**கலாத்.**4:4 நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி **நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை** மீட்டுக்கொள்ளத்தக்கதாக,

**14.சாபத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள்**

கலாத் 3:13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, **நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு** நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.

**15.ஒன்றாக்கப்பட்டவர்கள், ஒரே சரீரமாக்கப்பட்டவர்கள்.**

ரோமர்12:5 அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் **ஒரே சரீரமாயிருக்க**, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

1கொரி.12:12 ...சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; **ஒரே சரீரத்தின** அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.

1கொரி.10:17 ...ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் **ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.**

**16.வாக்குத்தத்த உடன்படிக்கைகளுக்குச் சொந்தமானவர்கள்**

எபே.3:3 ...புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின **வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற** இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

2கொரி.1:19-20 என்னாலும், சில்வானுவினாலம், தீமோத்தேயுவினாலும், உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார். எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, **தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென்** என்றும் இருக்கிறதே.

**17.கிறிஸ்துவாகிய தலையுடன் இணைக்கப்பட்டவர்கள்**

1கொரி 1:9 தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே **ஐக்கியமாயிருப்பதற்கு** உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

எபேசி.5:30 நாம் அவருடைய **சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும்** இருக்கிறோம்.

இன்னும் ஏராளமான இலவச ஆசீர்வாதங்கள் உண்டு. ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்போது புதுசிருஷ்டியாக மாறுகிறான். அப்படிப்பட்டவன் இலவசமாய் விசுவாசத்தால் பாவ மன்னிப்பு பெற்று. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் பெயரால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியானவர் அபிஷேகம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராகிறான்,

இப்படிப்பட்டவன் 1பேது 2:3 நீங்கள் **வளரும்படி,** புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். எபேசி4:11-13 நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய **நிறைவான வளர்ச்சியின்** அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்ப்படுத்தினார் என்ற வசனத்தின்படி வளரும்போது (கொலோ1:28) கிறிஸ்துவுக்குள் தேர்ச்சி அடைகிறான். எபி5:12.13.14 என்ற வசனத்தின்படி போதகராகிறான்,

மேலும் இப்படிப்பட்ட மனிதன் ஆவியால் நல்த்தப்படுகிறபடியால், இவனுக்கு அடிமைத்தனம், மார்க்க சட்ட திட்டங்கள் கிடையாது. (வேதத்தில் இரண்டு ஏற்பாடு அல்லது இரண்டு மார்க்கம் காணப்படுகிறது.)

## 1. யூத மார்க்கம்

எஸ்தர்8:17 ...யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் **யூதமார்க்கத்தில்** அமைந்தார்கள்.

அப்.2:10 ...ரோமாபுரியாரும், யூதரும், **யூதமார்க்கதமைந்தவர்களும்,**

அப்.6:5 ...**யூதமார்க்கத்தமைந்தவனான** அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலா வையும் தெரிந்துகொண்டு,

கலா.1:13.14 நான் **யூதமார்க்கத்திலிருந்தபோது** என்னுடைய நடக்கையைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி; என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.

அப்.3:43 ஜெபஆலயத்தில் கூடின சபைகலைந்துபோனபின்பு, யூதரிலும் **யூதமார்க்கத் தமைந்த பக்தியுள்ளவர்களிலும்** அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர் களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள்.

இந்த யூத மார்க்கம் மக்களை அடிமைப்படுத்தும் மார்க்கமாகவும், சபையை பாழாக்கி துன்பப்படுத்தியிருக்கிற மார்க்கமாகவும், இயேசுவையும் அவருடைய சீடர்களில் பலரை கொலை செய்யும் மார்க்கமாகவும் இருந்தது. மேலும் பலிகள், பண்டிகைகள், சட்டதிட்டங்கள், பலவிதமான சடங்காச்சாரங்களைக் கொண்ட மார்க்கமாகவும் இருந்தது. லேவியருக்கும் (ஊழியர்) இஸ்ரவேலருக்கும் இடையே 10 மடங்கு வித்தியாசம் என அநேக வேறுபாடுகள் இருந்தன. இயேசு கிறிஸ்து பூமிக்கு வரும்வரை அது மேன்மையான மார்க்கமாக இருந்தது.

## 2. விசுவாச மார்க்கம்

அப்.6:7 தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் **விசுவாசத்துக்குக்** கீழ்ப்படிந்தார்கள்.

அப்.24:24 சில நாளைக்குப்பின்பு பேலிக்ஸ் யூத ஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லா ளுடனேகூட வந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப்பற்றும் **விசுவாசத்தைக்** குறித்து அவன் சொல்லக்கேட்டான்.

அப்.26:18 அவர்கள் என்னைப் பற்றும் **விசுவாசத்தினாலே** பாவமன்னிப்பையும் பரிசுத்த மாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்.

கலா.1:23 முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின **விசுவாசத்தை** (கிறிஸ்துவை) இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து,

கலா. 3:7.9 **விசுவாசமார்க்கத்தார்கள்** எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைக ளென்று அறிவீர்களாக. **விசுவாசமார்க்கத்தார்** விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்.

யோவான்13:34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாய் இருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

இது இயேசுவை விசுவாசித்து அவர் வார்த்தைக்கு கீழ்படிந்து அன்பு என்ற பிரதான கட்டளையில் வாழ்வதாகும். இது **கிருபையின் மார்க்கம் / சத்தியமார்க்கம்** என்றும் அழைக்கப்படுகிறது, இதில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என பல்வேறு ஊழிய அழைப்பைப் பெற்றவர்களாக இருந்தாலும், பல்வேறு ஆவிக்குரிய வரங்களைப் பெற்றவர்களாக இருந்தாலும் அனைவரும் ஒரே சரீரத்தின் அவயவங்களே. இவர்கள் தங்களை சக தேவபிள்ளைகளை விட்டு வேறுபடுத்தி, மற்ற விசுவாசிகளைவிட உயர்வாகப் பேசுவதும், மற்றவர்களை ஆண்டு அடிமைப்படுத்துவதும் தனக்கும் பட்டம், பதவிகளைச் சூடிக் கொள்வதும் வேதவசனப்படி தவறாகத் தெரிகிறது,

லூக்கா6:26 எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

மத்.23:13 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.

லூக்கா11:43 பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள்.

எனவே, தேவ ஜனங்களாக இருக்கிற நாம் அனைவரும் தேவனுடைய இராஜ்யம் கட்டப்பட சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். இயேசுவை ஏற்றுக்கொண்ட **ஒவ்வொருவரும் ஊழியராக** இருக்கிறபடியால் உடலாலும், உழைப்பாலும், நமது பணத்தாலும் கர்த்தருடைய பணியை செய்ய வேண்டும்.

பழைய ஏற்பாட்டிலுள்ள எழுத்தின்படியான முறைமைகளும் சடங்காச்சாரங்களும் அதாவது யூத மார்க்கமும் அதன் உபதேச சட்டங்களும் நீக்கப்பட்டு அல்லது ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிய வேண்டும். மேலும் அப். 26:18ன்படி கிறிஸ்துவை விசுவாசிப்பதால் இலவசமாய் வரும் பாவ மன்னிப்பு, இரட்சிப்பு, பரிசுத்தவான்களுடைய சுதந்திரம், இருளைவிட்டு ஒளி, சாத்தான் மேல் அதிகாரம் போன்ற ஆசீர்வாதங்களை இலவசமாய் பெற்று அனுபவித்து, இந்த இலவச ஆசீர்வாதங்களை உலகிற்கு சுவிசேஷமாக அறிவிக்கும் பணி ஒவ்வொருவருக்கும் உண்டு,

இந்த கர்த்தருடைய சுவிசேஷ பணிக்கு ஏராளமான பணம் தேவை! வேத புத்தகத்தில் கர்த்தருடைய பணிக்காக காணிக்கை, தசமபாகங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதைக் குறித்து விவரமாக ஆராய்வோம்.

காணிக்கை என்ற வார்த்தை (offerings) வேத புத்தகத்தில் 106 இடங்களிலும், தசமபாகம் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 10 இடத்திலும், பழைய ஏற்பாட்டில் 31 இடத்திலும் காணப்படுகிறது. இதைக்குறித்து விபரமாக நடுநிலையோடு வசனத்தின் அடிப்படையில் ஆராய்ந்து, நமது பணத்தை இறைவனுடைய பணியில் செலவிட்டு, தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவோம்,

சில இடங்களில், சில சபைகளில் தசமபாகம், காணிக்கை கட்டாயமாக கொடுக்கப்பட வேண்டும். அப்படி தசமபாகம், காணிக்கை கொடுக்காவிட்டால், அவர்களுடைய வாழ்க்கையிலும், குடும்பத்திலும் சாபம் வரும், தரித்திரம் வரும், இன்னும் பலவிதமான பிரச்சனைகள் வரும் என்று பயமுறுத்துக்கிறபடியாலும் அன்றாடம் வாழ்க்கையில் வரும் எல்லா பிரச்சனைகளையும் சுட்டிக்காட்டி, இந்த பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம் தசமபாகம் கொடாமல் இருப்பதே என்றும் சிலர் போதிக்கிறபடியாலும் தசமபாகத்தைப் பற்றி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வேத வசனம் என்ன சொல்கிறது என்பதைக் கவனமாய் ஆராய்வோம். கருத்தாய்ப் படியுங்கள், என்னோடு தொடர்பு கொள்ளுங்கள், கருத்துக்களை பரிமாறுங்கள்,

ஆதி 14:20 “உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் **தசமபாகம்** கொடுத்தான்.”

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு எந்தவிதமான சட்டமும் இல்லாமல் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த ஆபிரகாம் தனது இஷ்டப்படி மெல்கிசதேக்கு என்பவருக்கு **தசமபாகம்** கொடுத்தான்.

இங்கே கவனிக்க வேண்டிய விபரமாவது, ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு **தசமபாகம்** கொடுப்பதற்கு முன்பாக மெல்கிசேதேக் என்ற ஆசாரியன் (ஊழியர்) தான் ஆபிரகாமுக்கு கொடுத்தார் என்று ஆதியாகமம் 14:18ல் “அன்றியும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு **அப்பமும் திராட்சரசமும்** கொண்டுவந்து அவனை ஆசீர்வதித்து” என்றுள்ளது.

மேலும் ஆபிரகாம் கொள்ளையிட்டதில் **தசமபாகம்** கொடுத்தாலும், தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு அதைத் தனக்காக பரலோகம் எடுத்து செல்ல முடியாதல்லவா! அந்த **தசமபாகம்** எதிரிகளால் சிறைபட்டு எல்லாவற்றையும் இழந்து, இப்போது ஆபிரகாமைக் கொண்டு மீட்கப்பட்ட ஏழைக்குத்தானே கொடுத்திருப்பார். ஏனெனில் அன்று ஆபிரகாமின் நாட்களில் ஆலயமும், வேறே ஆசாரியர்களும் இல்லையல்லவா! மேலும் இயேசுவின் ஊழியத்திலும் ஐந்து அப்பம் இரண்டு மீன், பேதுரு கொடுத்த படகு, மற்றவர்கள் இவருக்கு ஏறிச் செல்ல கொடுத்த கழுதை, இவர் தங்கிய அப்பம் பிட்ட வீடுகள் எதையும் இயேசு தனக்கு சொந்தமாக்காமல் அத்தனையையும் ஆசீர்வதித்து அன்றைய தினமே திரும்ப கொடுத்துவிட்டார் அல்லவா! தேவன் மனிதருக்கு கொடுத்த எந்த ஆசீர்வாதத்தையும் திரும்ப எடுப்பதும், அபகரிப்பதுமில்லை. எனவே தேவனோடு இணைந்த புது உடன்படிக்கையின் தேவபிள்ளைகளாகிய நாம் தாராளமாகக் கொடுக்கிறவர்களாக ஊழியம் செய்வோம். இன்னும் விபரமாக வசனத்தை ஆராய்வோம்.

எபி 7:4ல் “இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் **தசமபாகம்** கொடுத்தான்.”

ஆபிரகாம் கொள்ளையிடப்பட்ட பொருட்களில் தசமபாகம் (தான் சம்பாதித்து அல்ல யுத்தம் பண்ணி ஜெயித்து, அவர்கள் செல்வத்தில் இருந்து) கொடுத்தான் என்று எழுதப்பட்டுள்ளது,

எபி 7:3 “இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.” என்ற வசனப்படி மெல்கிசதேக்கு பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்பிடப்படுகிறார். (ஆவியானவர் மாற்று உருவில் வந்திருக்கலாம். தூதர்கள் வந்தது போல்) எபி 7:14 “நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.” என்றும் எபி7:17 “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்” என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார் என்றுள்ளது, எனவே. இயேசு கிறிஸ்து தனது 30 வயதில் ஞானஸ்நானம் எடுத்து கரையேறினபொழுது பரிசுத்த ஆவியனாவரால் அபிஷேகம் பண்ணப்பட்டார். அவர் பரி. ஆவியால் நிரப்பப்பட்ட பின்னரே (அபிஷேகம் பெற்ற பின்னரே) ஊழியம் செய்ய ஆரம்பித்தார். எனவே. மெல்கிசதேக்கு என்பவர் பரி. ஆவியானவருக்கு ஒப்பிடப்படுவதால் லேவி கோத்திரமில்லாமல் யூதா கோத்திரத்தை சேர்ந்த இயேசு பரி. ஆவி பெற்ற பின்பு அழியாத, மேன்மையான பிரதான ஆசாரியராகிறார். இதைத்தான் நீர் மெல்கிசதேக்கின் முறைமையின்படி (அபிஷேகம் பண்ணப்பட்டபடியால்) என்றென்றைக்கும் ஆசாரியராக இருக்கிறீர் என்று வேத வசனம் சொல்கிறது. இதன் அடிப்படையில் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின்

அபிஷேகம் பெற்ற அனைவரும் இயேசுவுடன் இணைந்த முழுமையான ஊழியர்களே. பழைய ஏற்பாட்டில் 3 பேர் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள்,

**1, இராஜாக்கள். 2, ஆசாரியர்கள். 3, தீர்க்கதரிசிகள்**

புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவை தேவன் ராஜாவாக, பிரதான ஆய்ாரியனாக, தீர்க்கதரிசியாக, எல்லா வரங்களையும் உடையவராக, பரிபூரணராக அபிஷேகம் பண்ணினார். அப்10:38.நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். கொலோ.2:9 சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,

நாம் இயேசுவுக்குள் வந்தபடியாலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றபடியாலும் நாம் அனைவரும் ராஜா, ஆசாரியர், தீர்க்கதரிசி என்ற நிலையை அடைகிறோம்,

எபேசி 1:23 எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

எபேசி 5:30 நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.

1கொரி. 12:12,27 சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்க ளெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்து வும் இருக்கிறார். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள்.

ரோமர் 12:4 நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்க ளுக்கும் ஒரே தொழில் இராததுபோல

இதுபோன்ற வேதவசனங்களின்படியும் அபிஷேகம் பெற்ற அனைவரும் இயேசுவாகிய தலையோடு இணைந்த உடன் ஊழியர்களாயிருக்கிறார்கள்.

எனவே எல்லாரும் உழைத்து அவரவர்களுக்கு கொடுத்த கிருபையின் அடிப்படையில் ஊழியம் செய்ய வேண்டும். குழந்தை அனுபவத்தில் இருப்பவர்கள் தனது பணத்தால் மற்றவர்களைக் கொண்டு ஊழியம் செய்யலாம். அதாவது, தனித்தோ அல்லது ஒரு குழுவாகவோ இணைந்து தர்ம பணம் சேகரித்து, தேவசித்தப்படி சிலரை முழுநேரப்பணிக்கு என்று நியமித்து அல்லது தேவனால் முழுநேரப்பணிக்கு என்று நியமிக்கப்பட்டவரோடு இணைந்து ஊழியம் செய்யலாம். எபி.10:5-9 வசனங்கள் பலியையும், காணிக்கையையும் விரும்பவில்லை என்றும் பலியும் காணிக்கையும் நீக்கப்பட்டது என்றும் தெளிவுபடுத்துகிறது. இன்று மிருக பலியை விட்டுவிட்டார்கள். குாணிக் கையை விடவில்லை. மாறாக காணிக்கை நிர்ப்பந்திக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் தர்ம சகாயம் / தர்ம பணம் என்றே கூறப்படுகிறது. இந்த வேத வசனத்தை குறித்த தெளிவு தேவை,

பழைய ஏற்பாட்டில் எபி7:5. "லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்துவந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே **நியாயப் பிரமாணத்தின்படி தசமபாகம்** வாங்குகிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்." நியாயப் பிரமாண சட்டம் இயேசுவின் சிலுவையோடு (திரைச்சீலை கிழிந்தபோது) முடிந்தது,

ரோமர்10:4 "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்."

எபே.2:15 "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி,"

கொலோ.2:14 "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;"

எபி.7:12 "ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், **நியாயப்பிரமாணமும்** மாற்றப்பட வேண்டியதாகும்."

ஆசாரியத்துவம் மாற்றப்பட்டாகிவிட்டது. நியாயப்பிரமாணத்தின் ஆடை அலங்காரம் (அங்கிகள், தொப்பிகள், கோல், பட்டை, நாடாக்கள்) எல்லாம் நீக்கப்பட்டன.

இயேசுவை ஏற்றுக்கொண்ட எல்லாரும் சகோதரர்கள், எல்லாரும் சமமானவர்கள்!

எபி.7:18 "முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப் பட்டது." இந்த வசனத்தின்படி நியாயப்பிரமாணம் பயனற்றது என்றும் எபி.7:22 "அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்." இந்த வசனத்தின்படி இயேசுவால் விசேஷ உடன்படிக்கை என்றும் எபி.7:24 "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்" இந்த வசனத்தின்படி மாறிப்போகாத ஆசாரி யத்துவம் என்றும் எழுதப்பட்டுள்ளதால் இயேசுவுடன் இணைந்தவர்கள் எல்லாரும் விசேஷ உடன்படிக்கையிலுள்ள ஒருவராலும் மாற்றமுடியாத ஆய்ாரியர்களாயிருக்கிறார்கள். 1பேதுரு 2:9 "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வர வழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜன மாயும் இருக்கிறீர்கள்."

எபி7:8 "...இங்கே, மரிக்கிற மனுஷர்கள் **தசமபாகம்** வாங்குகிறார்கள்; அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன் வாங்கினான்." இந்த வசனத்தின்படி இங்கே மரிக்கிற மனுஷர் **தசமபாகம்** வாங்குகிறார்கள் என்பது புதிய ஏற்பாட்டு சபை ஊழியத்தைக் குறிக்காமல். புதிய ஏற்பாட்டின் சபை காலத்தில் இருந்த யூதமார்க்கம் அல்லது நியாயப்பிரமாண சட்டத்தின்படி ஊழியம் செய்து கொண்டிருந்த ஆசாரியர்களைக் குறிக்கிறது. (பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள். இவர்கள்தான் இயேசுவை கொலை செய்தவர்கள்) எனவே. எபி7:8 படி இங்கே மரிக்கிற மனிதர்கள் என்பது யூத மார்க்கத்திற்கு உட்பட்ட மக்களை தான் குறிக்கிறது, இயேசு வந்த பின்பு இயேசுவை விசுவாசியாத யூதர்களுக்கு நித்திய ஜீவன் இல்லை. நித்திய மரணம் உண்டு, மரணத்தின்மேலும் மரணத்தின் அதிகாரியான பிசாசு (எபி2:14) மேலும் ஜெயம் எடுத்த இயேசுவின் சரீரத்தோடு இணைக்கப்பட்டபடியால் (எபேசி5:30) நாம் பிழைக்கிற மனிதர்களாக இருக்கிறோம். எனவே எபி.7:11படி இந்த ஊழியம் (பழைய ஏற்பாட்டு ஊழியம்) பூரணப்படுத்துதல் இல்லை. அதனால் நீக்கப்பட்டது. அதன் பிறகு மெல்கிசெதேக்கின் முறைமை யான புதிய ஏற்பாட்டு ஊழியம் அல்லது பூரணப்படுத்தும் ஊழியம் தொடங்கப்பட்டது.

எபி7:9.10 "மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், **தசமபாகம்** வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் **தசமபாகம்** கொடுத்தான் என்று சொல்லலாம்." இந்த வசனங்களை ஆராயும்பொழுது நியாயப்பிரமாணச் சட்டம் கொடுக்கப்படுவதற்கு முன்பே ஆபிரகாம் **தசமபாகம்** கொடுத்தான். அப்பொழுது லேவி பிறக்கவில்லை. பின்நாட்களில் லேவி ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தான் (அரையிலிருந்தான்). எனவே ஆபிரகாம் கர்த்தருக்கென்று கொடுத்தது லேவியும் ஆபிரகாம் மூலமாய் **தசமபாகம்** கொடுத்தான் என்று அர்த்தமாகிறது. அவனுக்கு ஆயிரம் தலைமுறைக்கும் ஆசீர்வாதம் வந்துவிட்டது. அதன் அடிப்படையில் நாம் இன்று கர்த்தருக்கென்று கொடுப்பது அல்லது செலவிடுவது நமக்கும், நமக்கு பிறக்கப் போகும் சந்ததிக்கும் நம் மூலமாய் ஆயிரம் தலைமுறைக்கும் ஆசீர்வாதம் வருகிறது. எனவே,

லூக்கா 6:37,38ன்படி கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். விடுதலை பண்ணுங்கள் அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள் என்று இயேசு கூறியுள்ளதை நினைவு கூறுங்கள்,

எனவே நீங்களும் உங்கள் சந்ததியும் நன்றாக இருக்க உங்கள் மனப்பூர்வத்தின்படி உங்கள் வருமானத்திற்கேற்ப **தர்மம்** (இது தசமபாகத்தைவிட கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கலாம்) உங்களால் இயன்ற அளவு தேவனுடைய ஊழியத்தில் (தவறான போதனைக்கு அல்ல) செலவு செய்யும்பொழுது அதற்குண்டான ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள். ஏனென்றால் நீங்களே தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் 1கொரி 3:16.

பழைய ஏற்பாட்டில் யூதர்களின் தேவாலயத்தை பண்டகசாலை என்றும், தேவனுடைய வீடு என்றும் அழைத்தார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள்தான் தேவனுடைய ஆலயம் என்றும் தேவனுடைய வீடு என்றும் அழைக்கப்படுகிறார்கள்,

1கொரி3:16. "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"

எபேசி2:19."நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,"

1தீமோத்3:15 "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும்ஆதாரமுமாயிருக்கிறது."

நாமே தேவனுடைய சொத்து. நாமே தேவனுடைய பண்டகசாலை. எனவே நமது வீட்டிலும். தேசத்திலும் ஆகாரம் உண்டாகி இருக்க தேவனுடைய வசனத்தை விசுவாசித்து செயல்பட வேண்டும்,

2கொரி 9:6 "பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில். சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்''

2கொரி 9:7 "அவனவன் விசனமாயும் அல்ல கட்டாயமாயுமல்ல. தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன், உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்,''

2கொரி 9:8 "மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூர்ணமுள்ளவர்களாயும். சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக. தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்''

என்ற வேத வசனங்களை விசுவாசித்து உங்கள் பணத்தை ஊழியப்பணிக்கு செலவிடும் பொழுது மாபெரும் பொருளாதார விருத்தியை அடைவீர்கள்,

யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் என்னை பின்பற்றக்கடவன் (அன்பு, தாழ்மை, தேவசித்தம் செய்தல் இதுவே இயேசுவை பின்பற்றுவதாகும்) நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரன் இருப்பான் (பரலோக பேரின்ப வாழ்வில் இருப்பான். அவனுக்கு நரகம் இல்லை) ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் (இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிதல், நன்மை செய்தல், சுவிசேஷம் அறிவித்தல் அப்10:38) அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார். (புகழ்ச்சி, கீர்த்தி, உயர்வு, சுகம், நீடிய ஆயுள், பொருளாதார விருத்தி, குடும்ப சமாதானம் இன்னும் பல விதத்தில் உங்களை இந்த பூமியில் ஆசீர்வதிப்பதும் பூலோக வாழ்விற்கு பிறகு பரலோக பேரின்ப வாழ்வைத் தருவதும் பிதாவானவரை கனம் பண்ணுதலாகும்) என்று வேதவசனம் கூறுகிறபடியால் இன்றே விதைக்க (ஊழியத்தில் செலவு செய்ய) தீர்மானம் செய்யுங்கள்,

மேலும் நீதி 3:9.10 “உன் பொருளாலும். உன் எல்லாவிளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும், உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டு ஓடும்’’ என்று வேதவாக்கியம் கூறுவதால், தொழில் புரிபவர்கள் லாபத்தில் 10%ல் ஆரம்பித்தும், பணிபுரிகிறவர்கள் வருமானத்தில் (சம்பளம்) உங்கள் குடும்பத்தை சரியாகக் கவனித்து, அதேசமயம் ஒருபகுதியை மனப்பூர்வமாய் சரியான விதத்தில் ஊழியத்தில் செலவு செய்து, ஆத்துமாக்களை (தனியாகவோ அல்லது ஒரு குழுவாகவோ) ஆதாயப்படுத்தும்போது வெகுசீக்கிரத்தில் உங்கள் பொருளாதார நிலை மாறி உங்கள் களஞ்சியங்கள் நிரம்பி வழிவதால், மிகவும் உற்சாகம் கொண்டு லாபத்தில் (வருமானத்திலல்ல) 50%க்கு மேலே தேவனுடைய சுவிசேஷ வேலைக்கு என்று செலவிடுவீர்கள்,

ஏனென்றால் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வார்த்தையின்படி நீங்கள் சுயாதீனமாக செயல்படுவதால் (தவறான போதனைக்கு கொடாமல் சரியான போதனைக்குக் கொடுப்பதால்) அதாவது இயேசுவினுடைய கட்டளைகளின்படி செயல்படுவதால் புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட எல்லா ஆசீர்வாதமும் பெருகுகின்றன,

நீதி.3:2 (என் போதனைகள்) “உனக்கு நீடித்த நாட்களையும். தீர்க்காயுசையும். சமாதானத்தையும் பெருகப்பண்ணும்’’ இந்த வேச வசனப்படி

1, நீடித்த ஆயுள் உண்டாகிறது (அகால மரணம் இல்லை)

2, தீர்க்க ஆயுசு (அற்ப ஆயுசு இல்லை)

3, எல்லாவற்றிலும் எல்லா நிலையிலும் சமாதானம்

இந்த மூன்று காரியங்களிலும் வேத வசனத்தைச் சரியாகக் கற்றுக்கொள்ளும்பொழுது பெருக்கம் ஏற்படுகிறது. மேலும் நீதி 3:16 “அதன் வலது கையில் தீர்க்காயுசும் இடது கையில் செல்வமும் கனமும் இருக்கிறது’’ அதே சமயம் வலது புறமும் இடது புறமும் சாயாமல் (செல்வத்திற்காக சாயாமல்) கர்த்தரையே பின்பற்றுவோமாக நீதி 4:27.

**பழைய ஏற்பாட்டில் தசமபாகத்தைக் குறித்து எழுதப்பட்ட வசனங் களை விபரமாக பார்ப்போம்.**

1. ஆதி 14:20யை பார்த்தோம். கொள்ளையிட்டதில் சுயாதீனமாக **தசமபாகம்** கொடுத்தான், ஆபிராகம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்தபடியால் பொன்னும் வெள்ளியுமுள்ள சீமான் ஆனான். பிள்ளையில்லாத அவனுக்கு 100 வயதில் பிள்ளை கிடைத்தது. ராஜாக்களோடு யுத்தம் பண்ணி தேவனால் ஜெயம் கிடைத்தது. எனவே, அவன் தேவனை விசுவாசித்து ஆசீர்வதிக்கப்பட்டதாலே **தசமபாகம்** கொடுத்தானேயன்றி, அவன் **தசமபாகம்** கொடுக்கிறதினாலே ஆசீர்வதிக்கப்படவில்லை என்று திட்டவட்டமாக தெரிகிறது. ஏனென்றால் பணம் கொடுத்து ஆண்டவரிடம் வியாபாரம் பேச முடியாது. பணத்தால் பரிசுத்த ஆவியானவரை பெறவும் முடியாது. ஏனெனில் அப்8:20ல் “,,,தேவனுடைய வரத்தை பணத்தால் சம்பாதிக்க நினைத்தபடியால் உன் பணம் உன்னோடு கூட நாசமாய்ப் போகக்கடவது’’ என்றுள்ளது, இங்கே பணம் (காணிக்கை) கொடுத்து ஆசீர்வாதம் பெற விரும்பியவன் இரட்சிக்கப்பட்டு, மூழ்கி ஞானஸ்நான உடன் படிக்கைக்கு உட்பட்ட தேவனுடைய மனிதன் என்பதை நினைவு கூற வேண்டும். எனவே அன்பினாலே கிரியை செய்கிற விசுவாசம் அவசியமாக இருக்கிறது,

2. ஆதி 28:22ல் யாக்கோபு தன் தகப்பனையும் சகோதரனையும் ஏமாற்றியதால். சகோதரன் தன்னை கொலைசெய்து விடுவான் என்று பயந்து, ஊரைவிட்டு ஓடிப்போகும்போது வழியில், இரவில் ஒரு கல்லை தலையில் வைத்து தூங்கும் போது சொப்பனத்தில் தேவன் அவனோடு பேசினார். ஆதி 28:18 “தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி, அதன்மேல் எண்ணெய் வார்த்து’’ ஆதி 28:20 “தேவன் என்னோடு இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து’’ ஆதி 28:21 “என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்

பண்ணுவாரானால், கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார்'' ஆதி 28:22. "நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும், தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் **தசமபாகம்** செலுத்துவேன்'' என்று சொல்லி பொருத்தனை பண்ணிக் கொண்டான். இங்கே அவன் பண்ணிய பொருத்தனைப்படி அவன் தசமபாகம் செலுத்துவது ஏதோ ஒரு நிறுவனம் அல்லது மனிதருக்கு அல்ல! **தசமபாகத்தைக்** கொண்டு வந்து, தேவசமூகத்தில் அன்றைய வழக்கத்தின்படி பலி செலுத்துதல் மற்றும் அந்த கல் நிறுத்தப்பட்ட இடத்தில் யாக்கோபும் அவனோடு இருந்த எல்லா ஜனங்களும் புசித்து, மகிழ்ந்து, தேவனுக்கு நன்றி செலுத்துவதாகும். இதுவும் ஒரு சுயாதீனச் செயல்பாடாகும்,

3. லேவி. 27:30,31 - யாக்கோபு எகிப்து சென்றார். அவருக்குப் பின் அவர்களுடைய சந்ததியர்கள் எகிப்தில் அடிமைப்படுத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டபோது அவர்களை தேவன் மோசேயின் மூலமாக அடிமைத்தனத்திலிருந்து மீட்டு சீனாய் மலையில் 10 கட்டளைகள், பலிகள், ஓய்வு நாள் ஆசரித்தல், பண்டிகைகள், **தசமபாகம்** மற்றும் அநேக சட்டதிட்டங்களைக் கொடுத்தார், லேவி 27:30ல் நிலத்தின் வித்திலும். விருட்சங்களின் கனியிலும் **தசமபாகம்** எல்லாம் கர்த்தருக்கு உரியது. அது கர்த்தருக்கு பரிசுத்தம் என்றான். லேவி27:32யில் ஆடுமாடுகளில் **தசமபாகம்** 1/10 கர்த்தருக்குரியது. இவைகளை எல்லாம் அன்று கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரவும், அதை அவர்களும் அவர்களுடனே லேவியர்களும் (ஊழியர்கள்) சேர்ந்து புசிக்கவும் வேண்டும் என்று கட்டளையிட்டார். ஏனென்றால் 1கொரி10:16 பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது. ஆகாய்2:8 வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார், ரோமர்8:17படி நாம் சேனைகளின் கர்த்தருடைய பிள்ளைகள். எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டிய சுதந்திரவாளிகள் அல்லது வாரிசுதாரர்களாக இருக்கிறோம் என்பதை அறிந்து விசுவாசிக்க வேண்டும்,

அதனால் ஒவ்வொருவரும் நலமான வேலை செய்து, அந்த வேலையின் வருமானத்தில் ஊழியம் செய்வதே மிகச் சிறந்ததாகத் தெரிகிறது. நமது பணம் மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் அனுபவிப்பது மட்டுமல்ல. நாம் பெற்ற ஆசீர்வாதங்களைக் கொண்டு அவரோடு கூட பாடுபடவேண்டியதும் (ஊழியம் செய்ய வேண்டியதும்) அவசியம் ரோமர் 8:17.

எனவே. மத் 25:15படி அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக கொடுத்த தாலந்தை கொண்டு அதாவது தனது / தான் பெற்ற கிருபை பணம், வரம், தனது வசதி வாய்ப்புகளைக் கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது, ஏனெனில் மத்.25:30ல் நாம் நமது தாலந்துகளை உபயோகிக்காமல் போகும்போது பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனை புறம்பான இருளிலே தள்ளி போடுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என இயேசு சொன்ன உவமைகளின் எச்சரிப்பை நினைவு கூற வேண்டும். மத்.25:14-30, லூக்கா 11:42-52வரை வசனங்களை ஆராயவும்,

4. எண்.18:21,26,31 தசமபாகம் பழைய ஏற்பாட்டில் சம்பளம். இது எல்லா லேவியருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியது (இது ஒரு லேவியருக்கு மட்டுமல்ல) புதிய ஏற்பாட்டில் எல்லாரும் லேவியரே! எண்.18:19ல் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி இஸ்ரவேல் புத்திரர் படைக்கிற படையல்கள் எல்லாம் லேவியருக்கும் அவர்களது குடும்பத்திற்கும் சேரும். புதிய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணமும், படையல்களும் இல்லை. அப்படி படையல் பண்ணினால் அது பேய் ஆராதனையாகிவிடும்,

எண்.18:20ல் ஆசரிப்பு கூடார வேலை செய்யும் ஊழியரான லேவியருக்கு இஸ்ரவேல் மக்கள் சொத்து கொடுத்ததுபோல. லேவியரான இவர்களுக்கு சொத்து சுதந்திரம் கொடுக்கப்படவில்லை, தேசத்தை 11 கோத்திரத்திற்குப் பங்கிட்டுக் கொடுத்தார். 12வது கோத்திரமான லேவியருக்கு தேவனே சொத்து என்று சொன்னார். ஆகையால் 18:21ன்படி ஆசரிப்பு கூடாரத்தில் பணிவிடை செய்கிற அவர்களுடைய வேலைக்காக, அவர்களுக்கு சொத்து சுதந்திரம் இல்லாதபடியால் **தசமபாகத்தில்** ஒரு பகுதி சம்பளமாக கொடுக்கப்பட்டது. இது எல்லா லேவியர்களுக்கும் பங்கிட வேண்டும்,

மேலும் எண்.18:22படி இவ்விதமாக இஸ்ரவேல் மக்கள் **தசமபாகம்** கொடுத்தாலும். மற்ற பல மோசேயின் சடங்காச்சாரங்களை நிறைவேற்றினாலும், அவர்கள் மேசேயின் நியாயப்பிரமாணப்படி ஆசரிப்பு கூடாரத்தில் அல்லது மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க அவர்களுக்கு உரிமை இல்லை, மீறி வருகிறவர்களுக்கு ஜீவனுக்கு பதிலாக மரணம் ஏற்படுகிறது,

எனவே, புதிய ஏற்பாட்டில் நாம் எல்லோரும் ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள், இயேசுவின் இரத்த புண்ணியத்தால் நாம் அனைவரும் கிறிஸ்துவுடன் இணைந்த ஊழியர்கள், பிள்ளைகள், ஆவிக்குரிய பிரகாரமாக கிருபாசனம் செல்லும் தகுதியை பெற்றவர்கள். எபேசி 2:7, எபி 4:16, எபி10:19, எபி.11:22-24 எனவே நியாயப்பிரமாண சட்டம் நம்மை ஆளுவதில்லை. சுயாதீனமாக, தாராளமாக உங்கள் பணத்தை ஊழியத்தில் விதையுங்கள்,

5. உபாகமம் 12:6, 11:17

12:1-6 வசனங்களில் இஸ்ரவேல் மக்கள், மற்றபுற இனத்தவர்கள், பலிபீடங்கள், சிலை களை அகற்றவும், பின்பு வசனம் 6,7 சர்வாங்க தகனங்கள், பலிகள், தசமபாகம், படைப்பு, பொருத்தனை, உற்சாகபலி, ஆடு மாடு தலையீற்று இவைகள் எல்லாம் (வெறும் **தசமபாகம்** மட்டுமல்ல என்பதைக் கவனிக்கவும்) தேவனுடைய எருசலேம் ஆலயத்திற்கு கொண்டு வந்து, வசனம் 7ன்படி குடும்பத்துடன் நீங்கள் புசித்து, குடும்பத்துடன் சந்தோஷப்பட வேண்டும் என்பதே மோசேயின் போதனையாக இருக்கிறது. உபா 12:11,12 தேவன் தெரிந்து கொண்ட ஆலயம் (குறிப்பிட்ட இடம் - எருசலேம் ஆலயம்) சர்வாங்க தகனம், உங்கள் பலி, உங்கள் தசமபாகம், உங்கள் படைப்புகள், விசேஷித்த எல்லா பொருத்தனையையும் கொண்டு வந்து தேவனுடைய சந்நிதியில் உபா.12:11,12ன்படி

1) நீங்கள், 2) உங்கள் குமாரர், 3) உங்கள் குமாரத்தி, 4) உங்கள் வேலைக்காரர், 5)உங்கள் வேலைக்காரி, 6) உங்களோடு பங்கும் சுதந்திரமும் இல்லாமல் (சொத்து இல்லாத) உங்கள் வாசல்களில் இருக்கிற லேவியனும் சந்தோஷப்படுவார்களாக என்று எழுதப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின்படி லேவியருக்கு சொத்து சுதந்திரம் கொடுக்கப்படவில்லை என்றும் இஸ்ரவேலருடைய வாசல்களில் இருந்ததாகவும் அவர்களுக்கு தசமபாகத்தில் சிறுபகுதி இஸ்ரவேல் மக்களோடு சேர்ந்து புசிக்கும் உரிமை கொடுக்கப்பட்டதாகவும் அறிகிறோம்,

மேலும் உபா 12:17 உன் தானியத்திலும், திராட்சை ரசத்திலும், உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடு மாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்து கொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும் உன் கை ஏறெடுத்து படைக்கும் படைப்புகளையும் நீ உன் வாசல்களில் புசிக்க வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் (எருசலேம் ஆலயத்தில், எல்லா ஆலயத்திலும் அல்ல) 1) நீயும், 2) உன் குமாரனும், 3) உன் குமாரத்தியும், 4) உன் வேலைக்காரனும், 5) உன் வேலைக்காரியும், 6) உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அதைப் புசித்து (தசமபாகம் + பொருத்தனை + எல்லாம்) கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்படுவீர்களாக. எனவே, பழைய ஏற்பாட்டில் தசமபாகம் + பொருத்தனை + விசேஷ காணிக்கை எல்லாம் ஊழியங்களுக்கு ஒரு பங்கை கொடுத்து மற்றவைகளை இஸ்ரவேல் மக்களே அனுப்பவித்தார்கள் என்று தெரிகிறது. புதிய ஏற்பாட்டில் நாம் தேவஜனமாக, ஆலயமாக இருக்கிறபடியால் மத் 6:20 பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டு திருடுகிறதும் இல்லை என்று இயேசு சொன்னபடியால் மீட்கப்பட்ட நீங்கள் சுதந்திரமாக உங்கள் பணத்தை பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்க (ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த) பயன்படுத்துவதால், தேவனுடைய இருதயத்தை சந்தோப்படுத்துகிறீர்கள் மத்.12:50, மத்.9:23, 1தீமோ.1:15, 3:4. இதுவே தேவனை நேசிப்பதும், அன்பு கூர்வதுமாகும். எனவே. நல்ல தரமான தீர்மானம் எடுத்து ஊழியம் செய்வீர்களாக,

6. உபாகமம் 14:22-29வரை வசனங்களில் வசனம் 22ல் வருடம் தோறும் வயலின் விளைச்சலில் **தசமபாகம்** பிரித்து வசனம் 23 தேவன் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்தில் (எல்லா கோவில்களிலும் அல்ல) உன் தானியத்திலும், உன் திராட்சை ரசத்திலும், உன் எண்ணெயிலும் **தசமபாகத்தையும்** உன் ஆடு, மாடுகளின் தலையீற்றுகளையும் அவருடைய **சந்நிதியில் புசிப்பாயாக.** வசனம் 24 உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும் காலத்தில் (தரித்திரனுக்கு ஒரு கட்டுப்பாடும் இல்லை) உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொண்ட ஸ்தானம் (எருசலேம் கோவில்) உனக்கு வெகுதூரமாக இருந்தால். வழிப்பிரயாணத்தில் வெகு தொலைவினிமித்தம் நியாயப்பிரமாண சட்டப்படி (பக்கத்திலே பலி செலுத்தி கோயில் கட்டிவிடக்கூடாது) நீ அதைக்கொண்டு போகக்கூடாதிருக்குமானால் வசனம் 25 அதை உன் **இஷ்டப்படி விற்று, பணமாக்கி** பணமுடிப்பை உன் கையில் பிடித்துக் கொண்டு உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொண்ட ஸ்தானத்திற்கு போய், வசனம் 26 அங்கே **உன் இஷ்டப்படி** (இங்கே லேவியர், பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயன் இவர்களுடைய இஷ்டம், அல்லது அதிகாரப்படி அல்ல) ஆடு, மாடு, திராட்சை ரசம், மதுபானம் முதலான சகலத்தையும், பணம் செலுத்தி வாங்கி, உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் 1) நீயும், 2) உன் குடும்பத்தாரும், 3) உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் **புசித்து சந்தோஷப்** படுவார்களாக. வசனம் 27 லேவியனுக்கு உன்னோடு பங்கும், சுதந்திரமும் இல்லாதபடியால் அவனை கைவிடாயாக.

7, உபாகமம் 14:28 மூன்றாம் வருஷத்தின் முடிவிலே, அவ்வருஷத்தில் வந்த பலன் எல்லாவற்றிலும் **தசமபாகத்தைப்** பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய். இந்த **தசமபாகம்** ஆலயத்திற்கு கொண்டுபோகாமல் அவர்கள் இஷ்டப்படி அவர்கள் வீட்டு வாசலிலே வைத்து அவர்களே பிரித்து கொடுத்ததாக அறிகிறோம். வசனம் 14:29 லேவியருக்கு உன்னோடு பங்கும், சுதந்திரமும் இல்லாதபடியால் 1) அவனும், 2) உன் வாசல்களில் இருக்கிற பரதேசியும், 3)விதவையும், 4)திக்கற்றவனும் **வந்து புசித்து, திருப்தி** அடைவார்களாக. அப்பொழுது உன் கை செய்யும் வேலையில் எல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். பழைய ஏற்பாட்டில் அப்பொழுது என்ற நிபந்தனையின்படி **தசமபாகத்தையும்** மற்ற காரியங்களையும் நமது இஷ்டப்படி நிர்வகிப்பதும், சாப்பிடுவதும், லேவியர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் பிரித்துக் கொடுப்பதுமே ஆசீர்வாதத்தில் வழி நடத்தும் என்று தேவன் சொன்னார். புதிய ஏற்பாட்டில் இயேசு உன்னை நேசிப்பது போல் பிறரையும் நேசி என்று சொன்னபடியாலும் நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டபடியாலும், யோவான் 13:34-35,15:17 மனப்பூர்வமாய் சரீரத்தாலும், பணத்தாலும், ஊழியம் செய்து நரகத்தின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்போமாக! மனப்பூர்வமாய் தாராளமாய் கொடுப்போமாக! தனியாகவோ, குழுவாகவோ (சபை) ஊழியம் செய்யலாம். அல்லது சிலரை நாம் தேவனுடைய வேலைக்கு என்று நியமித்து, அவர்களுக்கு மாதந்தோறும் நல்ல சம்பளம் கொடுத்து வேத வசனத்தின்படி ஒழுங்காக போதிக்கவும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தவும் செய்யலாம். (எனவே வசதி படைத்தவர்களும், தேவனை நேசிப்பவர்களும் ஒரு குழுவாக ஒன்று சேருங்கள். சுவிசேஷப் பணி செய்யுங்கள்)

8, உபாகமம் 26:12 **மூன்றாம் வருட தசமபாகம். தசமபாகம்** செலுத்தும் வருடமாகிய **மூன்றாம் வருடத்திலே,** நீ உன் வரத்தில் எல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து 1)லேவியனும், 2) பரதேசியும், 3) திக்கற்ற பிள்ளையும், 4) விதவையும் உன் வாசல்களில் புசித்து திருப்தியாகும்படி அவர்களுக்குக் கொடுத்து தீர்த்த பின்பு என்றுள்ளது. இங்கே 3ம் வருட **தசமபாகம்** கோயில் அல்லது ஆலயத்தில் கொடுப்பது இல்லை. இது உன் வாசல்களில் புசித்து, திருப்தி என்று எழுதியிருப்பதைக் கவனிக்கவும். உபா28:13-15 வசனங்களில் மோசேயின் கட்டளைப்படி சரியாக செய்தேன் என்று அதாவது வீட்டுவாசல்களில் **தசமபாகம்** சரியாக எல்லாருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டேன் எனறு தேவ சந்நிதியில் போய் அறிக்கையிட

வேண்டுமாம். மேலும் பாலும், தேனும் ஓடுகிற இந்த தேசத்தை ஆசீர்வதியும் என்றும் சொல்ல வேண்டுமாம்.

புதிய ஏற்பாட்டில் நமக்கு யூதமத சட்டம் (நியாயப் பிரமாணம்) இல்லாவிட்டாலும் தாராளமாக சுவிசேஷ பணிக்கு கொடுப்பது அல்லது பணத்தால் ஆத்தும ஆதாயப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. அப்20:35ல் பவுல் இப்படி பிராயசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே உத்தமம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்க வேண்டும் என்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார். இந்த வசனப்படி அப்போஸ்தலன் பவுலின் நல்ல முன் மாதிரியை நாம் பின்பற்றி, பவுல்போல் நல்ல தொழில் செய்து ஆத்தும ஆதாயம் செய்வோமாக!

இனிமேல் சொல்லப்படும் **தசமபாகங்கள்** எல்லாம் நியாயப்பிரமாணச் சட்டமாக இல்லாமல் மனிதர்களாலும், ராஜாக்களாலும், தீர்க்கதரிசிகளாலும் ஏற்படுத்தப்பட்டது.

9. 1சாமுவேல் 11:18 உங்கள் தானியத்திலும், உங்கள் திராட்சைப் பலனிலும் **தசமபாகம்** வாங்கி தன் பிரதானிகளுக்கும், தன் சேவர்களுக்கும் கொடுப்பான். இது சாமுவேல் முதிர்வயதானபடியால் தன்னுடைய 2 பிள்ளைகளை (யோவேல். அபியா) இஸ்ரவேலின் மேல் நியாதிபதியாக வைத்தான். இந்த பிள்ளைகள் பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் (லஞ்சம்) வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள். இதனால் வேதனைப்பட்ட இஸ்ரவேலர்கள், தங்களை ஆளுகை செய்ய ராஜா வேண்டும் என கேட்டனர். இதற்கு சாமுவேல் மிகவும் துக்கப்பட்டு, நீங்கள் கேட்டபடி ராஜாவை ஏற்படுத்தினால் அவன் உங்களை பலவிதத்தில் உற்த்திரப் படுத்துவான் என்று இந்த வசனங்களில் இஸ்ரவேல் மக்களை எச்சரிக்கிறான். இங்கே ஒரு விதத்தில் சாமுவேலின் சுயநலம் தெரிகிறது. அதாவது எனது பிள்ளைகள் உங்களுக்கு நியாயாதிபதி களாக இருக்க விரும்பாமல், எங்களுக்கு நியாதிபதியாக இருக்க எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். எனது பிள்ளைகளிடம் (யோவேல். அபியா) சில தவறுகள் இருக்கலாம் (பொருளாசை, லஞ்சம்). ஆனால் இவர்கள் **தசமபாகம்** மற்ற கொடுமை களை செய்யமாட்டார்கள். ஆனால் நீங்கள் கேட்டபடி நான் உங்களுக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்தினால் அந்த ராஜா வசனம் 11-18 வரை சொன்ன **தசமபாகம்** மற்ற கொடுமைகளைச் செய்வான் என்று எச்சரிக்கிறார். எனவே, இங்கு கூறப்பட்ட **தசமபாகம்** ராஜா மக்களை கொடுமைப்படுத்தி, எடுத்துக் கொள்வதாக தெரிகிறது. புதிய ஏற்பாட்டில் நாம் ராஜாக்கள், நாம் தேவபிள்ளைகள் என்று வேதவசனம் கூறுவதால் நாம் ஒருவரையும் கொடுமைபடுத்தாமல், ஒருவர் **தசமபாகத்தையும்** பணத்தையும் எடுக்காமல் நலமான வேலை செய்து நாமும் மற்றவர் களுடன் இணைந்து கர்த்தருடைய பணியைச் செய்வோமாக,

10. 2நாளாகமம் 31:5,6,12 இங்கே எசேக்கியா ராஜா நியாயப்பிரமாணத்தின் சட்ட திட்டங்களுக்கு மிகவும் வைராக்கியமாக இருந்து **தசமபாகத்தைக்** கட்டளையாக ஏற்படுத்தினார், வசனம் 5 இந்த வார்த்தை பிரசித்தமானபோது இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும், எண்ணெயிலும், திராட்சை ரசத்திலும், தேனிலும், நிலத்தின் எல்லா வரத்திலும், முதற்பலன்களைத் திரளாகக் கொண்டு வந்து, சகலத்திலும் **தசமபாகத்தை** பரிபூரணமாகக் கொடுத்தார்கள், வசனம்6ல்,,,,,, **தசமபாகத்தையும்** கொண்டு வந்து குவியல் குவியலாக வைத்தார்கள், வசனம்10ல் பிரதான ஆசாரியர் மற்ற எல்லா லேவியர் குடும்பங்களும் (ஒருவர் மட்டுமல்ல) **தசமபாகத்தை** சாப்பிட்டு திருப்தி அடைந்தார்கள். இன்னும் மிச்சமும் இருக்கிறது. கர்த்தர் தனது ஜனத்தை ஆசீர்வதித்ததால் இந்த திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றார்கள். சாமுவேல் எச்சரித்தபடி இங்கே எசேக்கியா ராஜா **தசமபாகத்தை** எடுக்கவில்லை. மாறாக இஸ்ரவேலரின் **தசமபாகத்தை** மொத்தமாக சேகரித்து அதை உத்தமமாக தேவனுடைய எழுத்தின்படியான ஆலயப்பணிவிடைக்கும் எல்லா லேவியர் குடும்பம் பிள்ளைகளுக்கும் பகிர்ந்து கொடுத்ததாக அறி கிறோம்,

2நாளா.31:12 ,,,,காணிக்கைகளையும், **தசமபாகத்தையும்** பரிசுத்தம் பண்ணப்பட்டவை களையும் உண்மையாய் எடுத்து வைத்தார்கள். அவைகள் மேல் லேவியனான கொனனியா தலைவனும் அவன் தம்பியாகிய சிமேயி இரண்டாவதுமாய் இருந்தான். 2நாளா. 31:13-20படி இந்த காணிக்கை, **தசமபாகம்** இவைகளை பொதுவாக வைத்து நிர்வாகம் பண்ணி இவைகளை லேவியரான எல்லா ஊழியர்களுக்கும், அவர்களது மனைவி பிள்ளைகள் எல்லாருக்கும் பங்கிடப்பட்டது. 2நாளா.31:16 அவர்களுடைய எல்லா கூட்டத்தின் அட்டவணையிலும் எழுதப்பட்ட அவர்களுடைய எல்லா குழந்தைகளுக்கும், மனைவிகளுக்கும், குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் பங்கு கொடுத்தார்கள். அவர்கள் பரிசுத்தமானதை உண்மையின்படி பரிசுத்தமாய் விசாரித்தார்கள். வசனம் 20ல் .....தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும், செம்மையும், உண்மையுமானதைச் செய்தான். இந்த வசனங்களின்படி லேவியர் என்ற ஒரு தனி இனத்திற்கு பூமியில் சுதந்திரம் கொடுக்கப்படாததால் இஸ்ரவேலரின் **தசமபாகம்,** காணிக்கை மற்றும் அவர்களால் ஆலயத்திற்கு கொண்டுவரப்படும் சகல காணிக்கை, பொருத்தனைக் காணிக்கை, உற்சாகக் காணிக்கை, பலி இவைகள் மற்றும் தேன், எண்ணெய் எல்லாமும் அவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இங்கே சொல்லப்பட்ட **தசமபாகம்** தேவனால் ஏற்படுத்தப்படாமல் எசேக்கியா இராஜாவால் ஏற்படுத்தப்பட்டது. அவன் நியாயப் பிரமாணத்தில் வைராக்கியமாக இருந்தபடியால் இதைச் செய்தார். மேலும் அதை உத்தமாக நிர்வாகம் செய்து எல்லா லேவியர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கச் செய்தார்.

புதிய ஏற்பாட்டில் எபி7:10,11படி ஆசாரியத்துவம், நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட அனைவரும் லேவியர் என்றும் ஆசாரியர் என்றும் அழைக்கப்படுகிறார்கள் வெளி.1:6, 1பேதுரு2:9, வெளி.5:9-10. எனவே எல்லா விசுவாசியும் ஆசாரியராக இருக்கிறபடியால், ஒவ்வொருவரும் ஊழியம் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆகையால் உங்களால் இயன்ற அளவில் தேவனுடைய வேலையை செய்வீர்களாக. இந்த பணியில் உண்மையாக செயல்படுகிறவர்களுக்கு உங்களால் இயன்ற பண உதவி அல்லது பொருள் உதவி செய்வீர்களாக. தவறான போதனைகளை தள்ளிவிட்டு, சரியானபடி கர்த்தருடைய வசனத்தை பரப்ப அதாவது சுவிசேஷமாக அறிவிக்க பிரயாசப்படுவீர்களாக!

11. நெகேமியா 10:36-39வரை எல்லாவற்றிலும் திராட்சைப்பழம், எண்ணெய், நிலப்பயிர், வெள்ளாண்மை இவைகளில் **தசமபாகம்** சேர்க்கப்பட்டு அதை ஆலயப் பராமரிப்புக்கு என்று செலவிடப்பட்டது. புதிய ஏற்பாட்டில் திரைச்சீலை கிழிக்கப்பட்டு, தேவாலயத்தை விட்டு வெளியே வந்த தேவன், இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்குள்ளும் வாசம்பண்ணுகிறார். இவர்களே தேவனுடைய ஆலமாக இருக்கின்றார்கள். மேலும் விசுவாசிகளின் ஐக்கியத்தை கிறிஸ்துவின் சபை என்று (எக்ளீசியா்) கூறப்படுகிறது. எனவே. எபி11:25ன்படி சபை கூடுதலை விட்டுவிடக் கூடாது என்று வேத வசனம் கூறுகிறபடியால் விசுவாசிகள் எல்லாரும் ஐக்கியப்படுவதும் அந்த ஐக்கியத்தில் தனது வரங்களைப் பகிர்ந்து கொள்வதும், ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருக்கிறபடியால் ஒருவர் மற்றவர்களுக்கு அனுகூலமாக செயல்படுவதும், ஒருவருக்கொருவர் புத்திச் சொல்வதும், உதவி செய்வதும் அவசியம். பண ஆசையும், சுயநலமும் இருக்கும்பொழுது ஐக்கியம் இல்லாமல் போய்விடுகிறது. வசனத்தை கலந்து தியானிக்க இடமில்லாமலும் போய்விடுகிறது, அதனால் ஆவிக்குரிய வரங்களும் செயல்படாமல் போகிறபடியால் சபை மக்கள் அநேக காரியங்களில் போதுமான வளர்ச்சியில்லாமல் இருக்கிறார்கள்.

எனவே சபை என்ற பெயரில் தனி ஒருவர் மற்ற சக தேவபிள்ளைகளை ஆளகை செய்யாமல் எல்லாரும் ஒரு சரீரத்தின் அவயவங்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். சபை கூடுதலின் நோக்கமே ஒருவருக்கொருவர் (வசனத்தைவிட்டு தவறாக போதிக்கும்பொழுது / நடக்கும்பொழுது) புத்தி சொல்ல வேண்டும் என்பதே! ஆனால் வேதவசனத்திற்கு எதிர்த்து நிற்பார் என்றால் இரண்டொருமுறை புத்தி சொல்லிவிட்டு அவரைவிட்டு விலகுவதும் அவருடன் கலவாமல் இருப்பதும் நல்லது.

அப்2:14படி ஆரம்ப நாட்களில் பேதுரு மற்ற பதினொருவருடன் நின்று சுவிசேஷம் பேச சுவிசேஷத்தைக் கேட்ட யூதர்கள் இரட்சிக்கப்பட்டு 3000 பேர் விசுவாசிகளானார்கள். அப்பொழுது பேதுரு இவர்களைப் பார்த்து வசனம் 2:40ல் பொல்லாத மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றார். அதாவது மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு இயேசுவை அறியாமல் கொலை செய்த யூத மார்க்கத்தில் உள்ள வேதபாரகர், பரிசேயர், பிரதான ஆசாரியர்கள் இவர்களின் உபதேசங்களை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றார். சுருங்கச் சொன்னால் நியாயப்பிரமாண சட்டதிட்ட உபதேசங்களை விட்டுவிலக வேண்டும். அப்பொழுதுதான் இரட்சிப்பு என்ற கருத்தை வலியுறுத்தினார். எனவே பிதாவாகிய தேவன் இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கின (அப்2:36) படியால் இவரைப் பின்பற்றுவதால் மட்டுமே இரட்சிப்பும் வேதத்தில் வாக்களிக்கப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களும் இலவசமாய் உண்டாகிறது என திட்டவட்டமாக போதித்தார்.

இந்த போதனையைக் கேட்ட விசுவாசிகள் ஆரம்ப நாட்களில் யூதமார்க்கமான நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகர்கள், பிரதான ஆசாரியர்கள் இவர்களை விட்டுவிலகி ஒன்றாகக் கூடி ஒருமனப்பட்டு தேவனை ஆராதித்தார்கள். அதே சமயம் பரிசேய சமயத்திலிருந்தும், யூதரிலிருந்தும் விசுவாசிகளானவர்கள், விருத்தசேதனம் பண்ணுவதும் மோசேயின் உபதேச சட்டங்களைக் கைக்கொள்ள (பலி செலுத்துதல் போன்றவை) போதிப்பதும் அவசியம் என்று வாக்குவாதம் பண்ணினார்கள் (அப்.15:1-7, 21:20-24) பல பிரச்சனைகளை எழுப்பினார்கள். ஒரு கட்டத்தில் அப்போஸ்தலனாகிய பவுலும், தீத்துவும் எதிர்த்து நிற்க முடியாமல் பலியும் விருத்தசேதனமும் போன்ற சடங்காச்சாரங்களைச் செய்தார்கள். அப்.21:26, கலா.2:3-4 பின் நாட்களில் அப்போஸ்தலர்களும், பவுலும் மோசேயின் சட்டதிட்டங்கள் (நியாயப்பிரமாணம்) சுமக்க முடியாத நுகத்தடி என்று தேவனால் திட்டவட்டமான வெளிப்பாடு பெற்று நியாயப்பிரமாணமும், பலிகளும், காணிக்கைகளும் முழவதுமாக நீக்கிவிட்டார்கள் அப்.15:10,24,29 எபி.10:4-9.

ஆரம்ப நாட்களில் ஒன்று கூடி இருந்த விசுவாசிகள் அநேகர் உபத்திரவம் வந்தபோது சிதறிப்போனார்கள். அப் 8:1 அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் மற்ற தேசங்களில் சிதறப்பட்டு போனார்கள் என்றும் அப் 8:4ல் சிதறிப்போனவர்கள் எங்கும் சுற்றித் திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் என்றும் வாசிக்கிறோம். ஒருவருக்கொருவர் சரியான ஐக்கியம் இல்லாமல் போய்விட்டது, (இவர்கள் சபை ஆரம்பத்தில் ஒரே ஐக்கியத்தில் ஒரு மனதில் வாழ்ந்தவர்கள்தான்) மேலும் கலா.1:11,12ல் பவுல் தான் பெற்ற சுவிசேஷம் ஒரு மனிதரால் பெற்றதும் இல்லை. ஒரு மனிதனிடமிருந்து (பைபிள் காலேஜில்) கற்றதும் இல்லை என்கிறார். மேலும் கலா 1:17ல் எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடம் சென்று போதனை படிக்கவில்லை. கலா 1:18 மூன்று வருடம் கழித்து பேதுருவிடம் வந்து 15 நாள் மட்டும் தங்கியிருந்ததாகவும் பின்பு கலா.2:1ன்படி 14 வருடம் கழித்து மறுபடியும் பர்னபாவுடன் எருசலேம் வந்ததாகவும் கூறுகிறார். எனவே தேவன் அப்போஸ்தலர் கூட்டத்தில் இல்லாத பவுலை தெரிந்து அப்போஸ்தலனாக்கியபடியால் எந்த மனிதனையும் தேவன் பயன்படுத்த வல்லவராய் இருக்கிறார் என்று அறிகிறோம்,

எனவே. சபை என்ற பெயரில் நாம் ஒருவரையும் நமக்கு அடிமைப்படுத்தக்கூடாது. நாமும் ஒருவருக்கும் அடிமையாகக் கூடாது. எல்லாரும் சுவிசேஷம் பேச வேண்டும், அல்லது தான் பெற்ற தாலந்து கிருபைகளின்படி ஊழியப் பணியில் செயல்பட வேண்டும். மேலும் இரத்தத்தால் கழுவப்பட்ட தேவபிள்ளைகள் எல்லாரும் சகோதரர்களாக, கிறிஸ்துவின் சரீரத்தில் அவயங்களாகவும் இருக்கிறபடியால், ஐக்கியப்படுவதும், வேதவசனங்களை சரியாக ஆராய்வதும், வசனத்தை தவறாக போதிக்கும்பொழுது புத்தி சொல்வதும் மிகவும் அவசியம். இதுவே சபை கூடுதலாகும்,

மேலும் 3யோவான் 9,10ல் தனி ஒரு மனிதனால் வசனத்திற்குப் புறம்பாக மக்களை நிர்வகித்து விசுவாசிகளைவிட முதன்மையாக இருக்க விரும்பின தியோத்திரேப்பு விசுவாசிகளையும் மற்ற ஊழியர்களையும் புறக்கணித்ததாகப் பார்க்கிறோம். தான் தவறு செய்வது மட்டுமல்ல. மற்றவர்களையும் அதே தவறுக்கு உட்படுத்தினார். எனவே, இரட்சிக்கப்பட்ட எல்லாரும்

இணைந்து தேவனுடைய ஆலயமாக மக்களை மாற்றும் பணியில் தீவிரமாக செயல்படுவது அவசியம். சபையானது இந்த பணிக்கு என்று முழுநேரப் பணி செய்ய சிலரை நியமிக்கலாம், நல்ல சம்பளம் கொடுத்து ஊழியம் தாலந்து உள்ளவர்களை தாராளமாகப் பயன்படுத்தலாம், அப்20:34 பவுல் வேலை செய்து தனக்கும் தன்னுடன் இருந்த ஊழியர்களுக்கும் கொடுத்தேன் என்கிறார்,

12. நெகேமியா 12:44, 13:12 இந்த வசனங்களில் உள்ள **தசம பாகமும்** (நெகே13:11-13) பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தேவனுடைய ஆலயம் (ஆசரிப்பு கூடாரம்) பராமரிக்காமல் கைவிடப்படக்கூடாது என்பதற்காக அதை பராமரிக்கும் பணியில் ஈடுபடுகிறவர்களுக்கும் அவர் களுடைய குடும்பத்தாருக்கும் **தசமபாகத்தை** உண்மையாய்ப் பங்கிட்டுக் கொடுத்தனர். இதைத் தனி ஒருவருக்கோ அல்லது அவருடைய குடும்பத்திற்கோ சொந்தமாக இல்லாமல் எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தனர்.

புதிய ஏற்பாட்டில் எபேசி 4:12,13படி பரிசுத்தவான்கள், சீர்பொருத்த சுவிசேஷ வேலைக்கும் சபையானது பக்தி விருத்தியடையவும் தேவன் சிலரை எ) அப்போஸ்தலராகவும் சிலரை பி)தீர்க்கதரிசிகளாகவும் சிலரை சி) சுவிசேஷகராகவும் சிலரை டி) மேய்ப்பராகவும் சிலரை இ)போதகராகவும் ஏற்படுத்தினார். 4:14 நாம் குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கு ஏதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல் அடிபட்டு அலைகிறவர்களாய் இராமல் என்று எழுதப்பட்டுள்ளது. எனவே. மேலே சொன்ன 5 விதமான ஊழியர்களும் மற்றும் சபையும் உலகமெங்கும் வளர்ச்சியடைய நம்மால் இயன்ற அளவு கொடுத்து தேவனுடைய பணி செய்ய வேண்டியது அவசியம். கலா 6:6 மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன், உபதேசிக்கப்படுகிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன். 6:7 மோசம் போகாதிருங்கள். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

2கொரி 9:8 விதைத்தல் - பெருக்கம் – பரிபூரணம். இவைகளை ஆராய்தல் நல்லது. மேலும் மாற்கு 10:40-42 இயேசு சொன்னபடி உண்மையான ஊழியர்களை ஏற்றுக் கொள்வதும், அதாவது சரியான வசன போதனைகளை ஏற்றுக் கொள்ளுதலும் அவர்களுக்கு உதவி செய்வதும் சரியான பலனை கொடுக்கும். எனவே, நீங்கள் ஊழியம் செய்யுங்கள். ஊழியத்திற்கு என்று செலவிடுங்கள், உதவுங்கள். எனவே, புதிய ஏற்பாட்டில் நமக்கு நியாயப்பிரமாணத்தின்படி **தசமபாக** சட்டம் இல்லாவிட்டாலும் நமது சுயாதீனத்தின்படி. தேவனையும் அவருடைய ஊழியத்தையும் நேசித்து, தாராளமாய் கொடுப்போமாக. அல்லது செலவிடுவோமாக. விசுவாசத்தால் விதைப்பதும் அறுப்பதும் ஒரு மாறாத பிரமாணமாக உள்ளது. கிரியை இல்லாத விசுவாசம் அல்லது செயல்படாத விசுவாசம் செத்ததாக இருக்கிறது. யாக். 2:20, யாக். 1:22,27ன்படி வசனத்தைக் கேட்பது மட்டுமல்ல செயல்படவும் வேண்டும்,

13. மல்கியா 3:8-12 வரை வசனங்களைப் பார்க்கும் பொழுது, மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? **தசமபாகம்,** காணிக்கை கொடாதவர்கள் தேவனை வஞ்சிக்கிறவர்கள் என்றும் சபிக்கப்பட்டவர்கள் என்றும் ஆலயத்தில் ஆகாரம் உண்டாகும்படி **தசமபாகங்களை** பண்டக சாலைக்கு (ஆலயத்தின் பொக்கிஷ அறை) கொண்டுவர வேண்டும். அதனால் வானத்தின் பலகணி திறந்து இடம்கொள்ளாமல் போகும் மட்டும் ஆசீர்வாதம் என்றும் விருத்தி என்றும் இஸ்ரவேல் தேசம் விரும்பப்படதக்கதாக இருக்கும் என்றும் சொன்னதாக எழுதப்பட்டுள்ளது,

பழைய ஏற்பாட்டில் 12 கோத்திரத்தில் லேவி கோத்திரத்துக்கு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு ஆசாரிப்பு கூடாரத்தில் பணிவிடை செய்யும்படியான வேலை கொடுக்கப்பட்டது. மற்ற 11 கோத்திரமும் தங்களுடைய **தசமபாகம்,** பலி, பொருத்தனை, காணிக்கை இவை களை தேவகட்டளைப்படி கொடுக்க சம்மதித்தனர். பின் நாட்களில் இஸ்ரவேல் மக்கள் நியாயப் பிரமாணப்படி செயல்படாதபடியாலும் சரியாக எருசலேம் தேவலாயத்தை பராமரிக்காமல் போனபடி யாலும் அவர்களைக் கண்டித்தார். மேலும் மல்கியா1:6,7,10; 2:2-11 வசனங்களின்படி லேவியர்

களும் கர்த்தருக்குப் பயப்படவில்லை. பலிபீடத்தை அசுத்தமாக்கினார்கள். வேதத்தைக் காக்க வில்லை. தாறுமாறான வாழ்க்கை வாழ்ந்தபடியால் லேவியரையும் கண்டித்தார். எனவே, நியாயப்பிரமாணப்படி லேவியர்கள் தாறுமாறாக வாழ்வதும், தேவனுடைய ஆலயத்தைப் பராமரிக் காமல் போனதும், யூதர்கள் **தசமபாகம்** கொடாமல் போனதும், தேவனுடைய பார்வையில் எல்லாருக்கும் சாபமாக காணப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாட்டில் கலா 3:13படி இயேசு நியாயப் பிரமாணத்தை தனது மாமிசத்தில் நிறைவேற்றி முடித்தார். மேலும் நியாயப்பிரமாணப்படி வாழாத யூதர்கள் மற்றும் புற இனத்தவர்கள் சாபத்தையும் ஏற்று, அதாவது எல்லாருடைய சார்பாகவும் சாபத்தை ஏற்று சாபத்தின் தண்டனையாக சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து பாதாளம் வரை சென்று முழு உலகின் பாவங்களையும் 2000 வருடங்களுக்கு முன்பே பரிகாரம் பண்ணி விட்டார். பின்பு நியாயப்பிரமாணத்தையும் அதன் சட்டதிட்டங்களையும் ஒழித்துவிட்டார். ரோமர்10:4, எபேசி2:14-15, கொலோ 2:12-13, கலா 4:4-6.

புதிய ஏற்பாட்டில் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் பிள்ளைகள், சுழ்ந்திரவாளிகள், நீதிமான்கள், பரிசுத்தவான்கள், குற்றமற்றவர்கள், கண்டிக்கப்படாதவர்கள், நியாயப்பிரமாண சட்டதிட்டங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்று இருப்பதால் நாம் தேவனுடைய வார்த்தைகளை விளங்கிக் கொண்டு அடிமைத்தனம் இல்லாமல் வஞ்சிக்கப்படாமல் நமது திராணிக்குதக்க உற்சாகமாக மனப்பூர்வமாக நமது பணம், பொருள், உடலுழைப்பு இவைகளைக் கொண்டு நமது பரம தகப்பனின் வேலையை (சுவிசேஷ ஊழியத்தை) செய்வோமாக. யோவான்1:12-13, ரோமர் 8:14-17, கொலோ 1:20-23, ரோமர் 3:23, 4:8, 5:1, கலா 5:14, ரோமர் 7:4,6. எனவே மல்கியா 3:8-11வரை வசனங்களில் சொல்லப்பட்ட சாபமோ, ஆசீர்வாதமோ புதிய ஏற்பாட்டு விசுவாசிகளை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்பதை திட்டமாக அறிய வேண்டும். மேலும் நாம் சாபத்திலிருந்தும், மல்கியாவில் சொல்லப்பட்ட வேதவசனத்திலிருந்தும் கிறிஸ்துவால் மீட்கப்பட்டு, பரிபூரணரான கிறிஸ்துவின் தலையோடு இணைக்கப்பட்டதால் வானத்தின் பலகணி நமக்கு திறப்பது நமது செயலால் அல்ல. நமது கிறிஸ்துவாலே என்பதை திட்டமாக அறிதல் அவசியம் 2கொரி. 8:9.

எனவே நீதி, இரக்கம், விசுவாசம், தேவ அன்பில் வாழ இயேசுவிடம் வரவேண்டும். பரிசுத்த ஆவியை பெற வேண்டும். தேவனுடைய வல்லமையோடு இணைந்தால் மாத்திரமே மேன்மையான ஆவிக்குரிய வாழ்வு வாழ முடியும் என்பதை அறிய வேண்டும்.

எனவே. மீட்பின் நிச்சயத்தை பெற்ற நாம் நீதியிலும், இரக்கத்திலும், விசுவாசத்திலும், தேவ அன்பிலும் (ரோமர்5:5) வாழ்வதுடன் மனப்பூர்வமாக நமது பணத்தாலும், பொருளாலும் கர்த்தரை சரியான விதத்தில் கனம் செய்வோமாக!

15. லூக்கா 18:12 பரிசேயனின் **தசமபாகம்.** லூக்கா 18:9-14 வரை வசனங்களில் பரிசேயன் தனக்குள் ஜெபிக்கிறான். தன்னுடைய நற்கிரியைகளை தேவனுக்குத் தெரியப் படுத்துகிறான். அதே சமயம் பாவியை அற்பமாக எண்ணுகிறான். அவனுடைய ஜெபம், **தசமபாகம்** மற்றும் நற்கிரியைகளைக் குறித்து மேன்மை பாராட்டாமல் தேவன் இயேசு கிறிஸ்து மூலமாய் தந்தருளின கிருபைகளைக் குறித்து மேன்மை பாராட்டி நமது வசதிக்கு ஏற்ப தாராளமாக தேவனுடைய சுவிசேஷ வேலையை செய்வோமாக!

புதிய ஏற்பாட்டில் நாம் எல்லாரும் சுயாதீனராக இருக்கிறபடியாலும், நாம் அனைவரும் இயேசுவாகிய தலையோடு இணைக்கப்பட்டதாலும் 1கொரி12:27, 1கொரி10:17, ரோமர்12:5, எபேசி4:15, 5:40.

நாம் அனைவரும் இராஜாக்களாக இயேசுவுடன் இணைந்த ஊழியராக இருக்கிறபடியாலும் வெளி1:6, 5:10, 1பேது2:9, எபி10:19, 9:13-14, 2 கொரி 6:1, 4:14.

ஒருவனும் தனக்குரிய தாலந்தைப் புதைத்து விடக்கூடாது என இயேசு எச்சரிப்பு கொடுத்த படியாலும் (மத்25:25 பயந்து போய் புதைத்தான் என்றும் மத்25:30 பிரயோஜனமற்ற ஊழியக்

காரன், புறம்பான இருள், அழுகை, பற்கடிப்பு உள்ள இடம் சென்றான் என்றும் உள்ளது) வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகள் ஒழிந்து போகாது. நான் சொன்ன வசனமே கடைசி நாளில் உங்களை நியாயம் தீர்க்கும் என்று இயேசு சொன்னபடியாலும் தேவனுடைய ஊழியத்தை அல்லது சுவிசேஷ பணியை (இரட்சிப்பில் நடத்துதல், சபை சீர்படுத்துதல், நிறைவான வளர்ச்சிக்கு பிரயாசப்படுதல் போன்றவை) செய்ய அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதும், செய்ததும் போல் எபேசி 4:27,28 பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள். திருடுகிறவன் இனித்திருடாமல் குறைச்சல் உள்ளவனுக்கு கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாகி இருக்கும்படி தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன் என்ற வேத வசனப்படி செயல்படுவோமாக.

மாற்கு 12:41-44, லூக்கா 21:1-4 வசனங்களில் அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்.

இங்கே ஏழை விதவை போட்ட 2 காசுகளைப் பற்றி படிக்கிறோம்,

ஐசுவர்யவான்கள் தங்களுடைய செல்வத்திலிருந்து பெரும் தொகையை காணிக்கைப் பெட்டியில் போட்டதையும், அதே சமயம் ஒரு ஏழை விதவை தன்னிடமிருந்த முழுத்தொகையான 2 காசுகளை காணிக்கைப் பெட்டியில் போட்டதையும் கவனித்த இயேசு ஐசுவர்யவான்களை விட ஏழை விதவைதான் அதிகம் போட்டதாகக் கூறினார். இந்த சம்பவத்தைச் சுட்டிக் காட்டி ஏழை விதவை போல் தனக்குள்ள எல்லாவற்றையும் காணிக்கையாகக் கொடுத்துவிட்டால் மிகுந்த ஆசீர்வாதம் உண்டாகும். வறுமை நீங்கி விடும் என்று சிலர் போதிக்கிறார்கள். இவ்வாறாகப் போதிப்பது மற்ற வேத வசனங்களின் அடிப்படையில் சரியாகத் தெரியவில்லை. காணிக்கை போட்டு அல்லது பணத்தினால் தேவனை திருப்திப்படுத்த முடியாது. அங்கே அந்த விதவை யூத பாரம்பரிய முறைமையின்படி காணிக்கை செலுத்தினாள். அவள் போட்ட காணிக்கையால் அவளுக்கு இரட்சிப்பில்லை என்பதை நாம் திட்டவட்டமாக அறிகிறோம். ஆனால் அங்கே அந்த காணிக்கைப் பெட்டியின் அருகில் நின்று கொண்டிருந்த இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொள்வதால் மட்டுமே ஆசீர்வாதத்தையும், இரட்சிப்பையும் பெற முடியும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இதை விட்டுவிட்டு தன்னிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுப்பதோ அல்லது கோடிக்கணக்கான பணத்தை காணிக்கையாகக் கொடுப்பதோ, கொடுக்கும்படி நிர்பந்திப்பதோ அதனால் மனிதனுக்கு இரட்சிப்பில்லை,

எபிரேயர் 10:5-9 ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்படி பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். **இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்.**

இந்த வசனங்களின்படி பலியையும், காணிக்கையையும் அவர் விரும்பவில்லை. நியாயப்பிரமாணப்படி செலுத்தப்படும் **பலியும் காணிக்கையும் நீக்கப்பட்டது** என்று அறிகிறோம். அன்பினால் சுவிசேஷப் பணிகளுக்கும் பரிசுத்தவான்களின் குறைவுகளுக்கும் நாம் செலவிடுவதே சிறந்ததாகத் தெரிகிறது,

ரோமர் 15:26,31லும் 2கொரி8,9 அதிகாரங்களிலும் **தசமபாகம்** கொடுக்கப்படும்படியாக போதிக்கப்படாமல் **தர்மசகாயம்** செய்வதையே வலியுறுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் **தசமபாகச்** சட்டம் நீக்கப்பட்டு அதேசமயம் தான தர்மங்கள் ஒவ்வொரு விசுவாசியும் மனப்பூர்வமாய் செய்யும்படியாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தான தர்மங்கள் பிரதானமாக விசுவாசிகளாகிய பரிசுத்தவான்களின் குறைவை நீக்குவதற்காக சேகரிக்கப்பட்டது. 1கொரி 9:14 (விசுவாசிகளும், ஊழியர்களும் ஒன்றே, ஒரே சரீரமே.)

## இது சம்பந்தமாக மக்கள் மத்தியில் எழும்புகிற கேள்விகளும் பதில்களும்

1. **<u>கேள்வி:</u>** மத். 23:23 இவைகளையும் செய்ய வேண்டும். அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே என்று இயேசு சொன்னாரே, இயேசு சொன்னபடி **தசமபாகம்** கொடுக்க வேண்டாமா?

**<u>பதில்:</u>** இயேசு நியாயப்பிரமாணத்தின் கீழ் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராக, நியாயப்பிரமாண போதகராகத்தான் இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்பட்டார். எனவே இயேசு சிலுவை மரணத்துக்கு முன்பு உள்ள யூதர்களுக்கு இந்த வசனம் அப்படியே கடைப்பிடிக்க வேண்டும். புற இனத்தவர்களுக்கு சம்மந்தமில்லை. அவர் சிலுவையில் மரிக்கும்பொழுதுதான் நியாயப்பிரமாணம் முடிந்தது. திரைச்சீலையும் கிழிந்தது. பழைய ஏற்பாட்டின் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது. மேலும் ரோமர் 3:19ன்படி நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே என வாசிக்கிறோம். நாம் நியாயப்பிரமாணத்திற்கு உட்படாத புற இனத்தவர்கள் என்பதை மனதில் கொள்ளவேண்டும். மேலும் கலா.5:4 நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்து விட்டீர்கள் என்றுள்ளது. இதைக்குறித்த பல்வேறு ஆங்கில மொழி பெயர்ப்பை கவனிக்கவும்.

**Galatians 5:4**

(KJVA) Christ is become of no effect unto you, whosoever of you are justified by the law; ye are fallen from grace.

other versions

(ALT) You* were cut off from Christ, you* who are justified *[or, declared righteous]* by *[the]* Law! You* fell away from His grace!

(ASV) Ye are severed from Christ, ye would be justified by the law; ye are fallen away from grace.

(BBE) You are cut off from Christ, you who would have righteousness by the law; you are turned away from grace.

(CEV) And if you try to please God by obeying the Law, you have cut yourself off from Christ and his wonderful kindness.

(Darby) Ye are deprived of all profit from the Christ as separated *from him* , as many as are justified by law; ye have fallen from grace.

(DRB) You are made void of Christ, you who are justified in the law: you are fallen from grace.

(EMTV) You have become estranged from Christ, you who are justified by law; you have fallen from grace.

(ESV) You are severed from Christ, you who would be justified by the law; you have fallen away from grace.

(GNB) Those of you who try to be put right with God by obeying the Law have cut yourselves off from Christ. You are outside God's grace.

(GW) Those of you who try to earn God's approval by obeying his laws have been cut off from Christ. You have fallen out of God's favor.

(HNV) You are alienated from Messiah, you who desire to be justified by the Torah. You have fallen away from grace.

(ISV) Those of you who are trying to be justified by the law have been cut off from Christ. You have fallen away from grace.

(KJV) Christ is become of no effect unto you, whosoever of you are justified by the law; ye are fallen from grace.

(KJVR) Christ is become of no effect unto you, whosoever of you are justified by the law; ye are fallen from grace.

(LITV) *you* whoever are justified by Law, you were severed from Christ; you fell from grace.

(MRC) You have been rendered ineffective from Messiah, you who are seeking to be justified by Torah; you have fallen from grace.

(MSG) I suspect you would never intend this, but this is what happens. When you attempt to live by your own religious plans and projects, you are cut off from Christ, you fall out of grace.

(Murdock) Ye have renounced the Messiah, ye who seek justification by the law: and ye have apostatized from grace.

(WEB) You are alienated from Christ, you who desire to be justified by the law. You have fallen away from grace.

(Webster) Christ is become of no effect to you, whoever of you are justified by the law; ye have fallen from grace.

(WNT) Christ has become nothing to any of you who are seeking acceptance with God through the Law: you have fallen away from grace.

(YLT) ye were freed from the Christ, ye who in law are declared righteous; from the grace ye fell away;

இந்த மொழி பெயர்ப்புகளின்படி நியாயப்பிரமாணத்தின்படி செயல்பட்டால் கிறிஸ்துவை விட்டும் அவர் ஐக்கியம், அவர் ஆசீர்வாதம் இவைகளை விட்டும் பிரிந்து விட்டதாகவும், கிருபையில் இருந்து விழுந்துவிட்டதாகவும் எழுதப்பட்டுள்ளது. அதாவது பரலோக வாழ்வு இல்லை என தெளிவுபடுத்துகிறது.

மேலும், Cut off from Christ, No effect போன்ற ஆங்கில வார்த்தைகள் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. No effect என்ற வார்த்தைக்கு Katargeho (Kat-arg-eh-o) என்ற வார்த்தை

கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு abolish, cease, cumber, deliver, destroy, do away, become (make) of no (none, without) effect, fail, loose, bring (come) to nought, put away (down), vanish away, make noid, என்று Strong's Greek & Hebrew dictionary-யில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதே வார்த்தைதான் எபே.2:15 நியாயப்பிராமணத்தை ஒழித்துவிட்டார் என்ற வார்த்தைக்கும் Abtolised என்ற ஆங்கில வார்த்தைக்கும் Katargeho என்ற வார்த்தை தான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கலா.3:10 "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்..." என்றுள்ளது. இந்த வசனத்தின் மற்ற ஆங்கில மொழிபெயர்ப்புகளை பார்க்கும் பொழுது:-

**Galatians 3:10**

For as many as are of the works of the law are under the curse: for it is written, Cursed *is* every one that continueth not in all things which are written in the book of the law to do them.

(ALT) For as many as are *[trying to be justified]* by works of *[the]* Law are under a curse, for it has been written, "Under a curse *[fig., Condemned by God] [is]* every *[one]* not remaining in *[fig., carefully obeying]* all the *[things]* having been written in the Scroll of the Law to do them." *[Deut 27:26]*

(ASV) For as many as are of the works of the law are under a curse: for it is written, Cursed is every one who continueth not in all things that are written in the book of the law, to do them.

(BBE) For all who are of the works of the law are under a curse: because it is said in the Writings, A curse is on everyone who does not keep on doing all the things which are ordered in the book of the law.

(CEV) Anyone who tries to please God by obeying the Law is under a curse. The Scriptures say, "Everyone who doesn't obey everything in the Law is under a curse."

(Darby) For as many as are on the principle of works of law are under curse. For it is written, Cursed is every one who does not continue in all things which *are* written in the book of the law to do them;

(DRB) For as many as are of the works of the law are under a curse. For it is written: Cursed is every one that abideth, not in all things which are written in the book of the law to do them.

(EMTV) For as many as are of the works of the law are under the curse; for it is written, "Cursed is everyone who does not continue in all the things which are written in the book of the law, to do them."

(ESV) For all who rely on works of the law are under a curse; for it is written, "Cursed be everyone who does not abide by all things written in the Book of the Law, and do them."

(GNB) Those who depend on obeying the Law live under a curse. For the scripture says, "Whoever does not always obey everything that is written in the book of the Law is under God's curse!"

(GW) Certainly, there is a curse on all who rely on their own efforts to live according to a set of standards because Scripture says, "Whoever doesn't obey everything that is written in Moses' Teachings is cursed."

(HNV) For as many as are of the works of the law are under a curse. For it is written, "Cursed is everyone who doesn't continue in all things that are written in the scroll of the Torah, to do them."

(ISV) Certainly all who depend on the works of the law are under a curse. For it is written, "A curse on everyone who does not obey everything that is written in the book of the law!"

(KJVA) For as many as are of the works of the law are under the curse: for it is written, Cursed *is* every one that continueth not in all things which are written in the book of the law to do them.

(LITV) For as many as are out of works of Law, *these* are under a curse. For it has been written, "Cursed *is* everyone who does not continue in all the things having been written in the book of the Law, to do them." *Deut. 27:26*

(MKJV) For as many as are out of works of the Law, these are under a curse; for it is written, "Cursed *is* everyone who does not continue in all things which are written in the Book of the Law, to do them."

(MRC) For as many as are outside of the works of Torah are under a curse. For it is written, "CURSED IS EVERYONE WHO DOES NOT CONTINUE TO DO ALL THINGS WRITTEN IN THE SCROLL OF THE TORAH, TO DO THEM."

(MSG) And that means that anyone who tries to live by his own effort, independent of God, is doomed to failure. Scripture backs this up: "Utterly cursed is every person who fails to carry out every detail written in the Book of the law."

(Murdock) For they who are of the deeds of the law, are under the curse: for it is written, Cursed is every one who shall not do every thing written in this law.

(WNT) All who are depending upon their own obedience to the Law are under a curse, for it is written, "CURSED IS EVERY ONE WHO DOES NOT REMAIN FAITHFUL TO ALL THE PRECEPTS OF THE LAW, AND PRACTISE THEM."

(YLT) for as many as are of works of law are under a curse, for it hath been written, `Cursed *is* every one who is not remaining in all things that have been written in the Book of the Law to do them.

இது தவிர எபேசியர் 2:15 “சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே **ஒழித்து**, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,” இந்த வசனத்தையும் இதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் பார்க்கும்பொழுது கீழ்கண்டவாறு உள்ளது.

**Ephesians 2:15**

Having **abolished** in his flesh the enmity, *even* the law of commandments *contained* in ordinances; for to make in himself of twain one new man, *so* making peace;

(ALT) having done away with *[or, having annulled]* the hostility in His flesh, the law of the commandments in ordinances, so that from the two He should create in Himself into one new person *[or, humanity]*, making peace,

(ASV) having abolished in the flesh the enmity, *even* the law of commandments *contained* in ordinances; that he might create in himself of the two one new man, *so* making peace;

(BBE) Having in his flesh put an end to that which made the division between us, even the law with its rules and orders, so that he might make in himself, of the two, one new man, so making peace;

(CEV) to destroy the Law of Moses with all its rules and commands. He even brought Jews and Gentiles together as though we were only one person, when he united us in peace.

(Darby) having annulled the enmity in his flesh, the law of commandments in ordinances, that he might form the two in himself into one new man, making peace;

(DRB) Making void the law of commandments contained in decrees: that he might make the two in himself into one new man, making peace

(EMTV) having abolished in His flesh the enmity, that is, the law of commandments contained in ordinances, that He might create in Himself one new man *from* the two, *thus* making peace,

(ESV) by abolishing the law of commandments and ordinances, that he might create in himself one new man in place of the two, so making peace,

(GNB) He abolished the Jewish Law with its commandments and rules, in order to create out of the two races one new people in union with himself, in this way making peace.

(GW) He brought an end to the commandments and demands found in Moses' Teachings so that he could take Jewish and non-Jewish people and create one new humanity in himself. So he made peace.

(HNV) having abolished in the flesh the hostility, the Torah of commandments contained in ordinances, that he might create in himself one new man of the two, making shalom;

(ISV) He rendered the law inoperative, along with its commandments and regulations, so that he might create in himself one new humanity from the two, thus making peace,

(KJV) Having abolished in his flesh the enmity, *even* the law of commandments *contained* in ordinances; for to make in himself of twain one new man, *so* making peace;

(KJVA) Having abolished in his flesh the enmity, *even* the law of commandments *contained* in ordinances; for to make in himself of twain one new man, *so* making peace;

(LITV) in His flesh causing to cease the enmity, the Law of the commandments in decrees, that He might in Himself create the two into one new man, making peace,

(MKJV) having abolished in His flesh the enmity (the Law of commandments *contained* in ordinances) so that in Himself He might make the two into one new man, making peace *between them*;

(MRC) by rendering inoperative the enmity, the *religious* Law of commandments contained in dogma, that in Himself He might make the two into one renewed man, making peace,

(MSG) He repealed the law code that had become so clogged with fine print and footnotes that it hindered more than it helped. Then he started over. Instead of continuing with two groups of people separated by centuries of animosity and suspicion, he created a new kind of human being, a fresh start for everybody.

(Murdock) and by his prescriptions he hath abolished the law of ordinances; that, in himself, he might make the two to be one new man; and he hath made peace,

(WEB) having abolished in the flesh the hostility, the law of commandments contained in ordinances, that he might create in himself one new man of the two, making peace;

(Webster) Having abolished in his flesh the enmity, *even* the law of commandments *contained* in ordinances: to make in himself of two one new man, *so* making peace;

(WNT) by setting aside the Law with its commandments, expressed, as they were, in definite decrees. His design was to unite the two sections of humanity in Himself so as to form one new man,

(YLT) the enmity in his flesh, the law of the commands in ordinances having done away, that the two he might create in himself into one new man, making peace.

இது தவிர கொலேசியர் 2:14 “நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் (நியாயப்பிராமணத்தை) குலைத்து, அதை நடுவிலிராத படிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;” இந்த வசனத்தையும் இதன் ஆங்கில மொழி பெயர்ப்பையும் பார்க்கும் பொழுது கீழ்கண்டவாறு உள்ளது.

**Colossians 2:14**

(ALT) having blotted out *[or, canceled]* the handwritten record of debts in the ordinances against us, which was contrary to us, and He has taken it out of the way, having nailed it to the cross;

(ASV) having blotted out the bond written in ordinances that was against us, which was contrary to us: and he hath taken it out that way, nailing it to the cross;

(BBE) Having put an end to the handwriting of the law which was against us, taking it out of the way by nailing it to his cross;

(CEV) God wiped out the charges that were against us for disobeying the Law of Moses. He took them away and nailed them to the cross.

(Darby) having effaced the handwriting in ordinances which *stood out* against us, which was contrary to us, he has taken it also out of the way, having nailed it to the cross;

(EMTV) having blotted out the handwriting of ordinances that was against us, which was contrary to us, and He has taken it out of the midst, nailing it to the cross.

(ESV) by canceling the record of debt that stood against us with its legal demands. This he set aside, nailing it to the cross.

(GNB) he canceled the unfavorable record of our debts with its binding rules and did away with it completely by nailing it to the cross.

(GW) He did this by erasing the charges that were brought against us by the written laws God had established. He took the charges away by nailing them to the cross.

(HNV) wiping out the handwriting in ordinances which was against us; and he has taken it out of the way, nailing it to the cross;

(ISV) having erased the charges that were brought against us with their decrees that were hostile to us. He took those charges away when he nailed them to the cross.

(KJV) Blotting out the handwriting of ordinances that was against us, which was contrary to us, and took it out of the way, nailing it to his cross;

(KJVR) Blotting out the handwriting of ordinances that was against us, which was contrary to us, and took it out of the way, nailing it to his cross;

(LITV) blotting out the handwriting in the ordinances against us, which was contrary to us, even *He* has taken it out of the midst, nailing it to the cross;

(MKJV) blotting out the handwriting of ordinances that was against us, which was contrary to us, and has taken it out of the way, nailing it to the cross.

(MRC) having erased out the certificate of debt of dogmas against us *and* that which was hostile to us; and He has taken it out of *our* midst, having nailed it to the cross.

(MSG) the slate wiped clean, that old arrest warrant canceled and nailed to Christ's Cross.

(Murdock) and, by his mandates, he blotted out the handwriting of our debts, which [handwriting] existed against us, and took [it] from the midst, and affixed [it] to his cross.

(WEB) wiping out the handwriting in ordinances which was against us; and he has taken it out of the way, nailing it to the cross;

(Webster) Blotting out the hand-writing of ordinances that was against us, which was contrary to us, and took it out of the way, nailing it to his cross;

(WNT) The bond, with its requirements, which was in force against us and was hostile to us, He cancelled, and cleared it out of the way, nailing it to His Cross.

(YLT) having blotted out the handwriting in the ordinances that is against us, that was contrary to us, and he hath taken it out of the way, having nailed it to the cross;

இந்த வசனங்களின்படியும் நியாயப்பிரமாணமும், அதன் சட்டதிட்டங்களும் ஒழிக்கப்பட்டப் படியால் நியாயப்பிரமாணங்களின் கிரியைகளுக்கு உட்பட்டவர்களுக்கு பரலோகத்தில் இடமில்லை என தெரிகிறது.

இதுவரை பார்த்த எல்லா வேதவசனங்களின் அடிப்படையில் **தசமபாகத்தை** நியாயப்பிரமாணத்திற்குட்பட்ட யூதர்கள் தான் லேவியரோடு இணைந்து சாப்பிட வேண்டும் என்று படித்தோம். புதிய ஏற்பாட்டில் நாம் தேவனுடைய பிள்ளைகள் அல்லவா, நம்முடைய தகப்பனின் ஆசீர்வாதத்தை நாம் தானே அனுபவிக்க வேண்டும். நாம் தானே ஆலயம், நாம் தானே தேவனுடைய வீட்டார். நாம் தானே பண்டகசாலை. பண்டகசாலையில் உள்ளதை மற்றவர் களுக்கும் கொடுக்காமல் ஒருவரே அனுபவிப்பது தவறு அல்லவா?

**2. <u>கேள்வி:</u>** லூக்கா 20:25ல் இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்று இயேசு சொன்னாரே. தேவனுடைய **தசமபாகம்**, காணிக்கையை தேவனுக்கு செலுத்த வேண்டியது அவசியமல்லவா?

**பதில்:** இயேசுவை ஏற்றுக் கொண்ட அனைவரும் தேவனுடைய பிள்ளைகள். ஊழியர்கள், சகோதரர்கள் என்றெல்லாம் இதுவரை பார்த்தோம். நாம் உலகிற்கு ஒளியாக, உப்பாக இருக்க வேண்டும் என இயேசு கூறியுள்ளார்.

ஒவ்வொரு தேவபிள்ளையும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயமாயும், தலையாகிய கிறிஸ்து உடன் இணைந்த ஊழியராகவும் இருக்கிறபடியால் தேவனுடையதை தேவனுக்கு செலுத்த அல்லது தேவராஜ்யம் கட்டப்பட, அல்லது சுவிசேஷ பணி செய்ய கொடுக்க வேண்டியது அவசியமே! இந்த பணிக்கென்று மற்றவர்களுடைய பணத்தை திருடிக் கொடுக்காமல் உழைத்து கொடுக்க வேண்டுமல்லவா!

அடுத்து ராயனுடையதை ராயனுக்கும் கொடுங்கள் என்றார். அன்று ராயன் என்பது இன்று அரசாங்கத்தைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் குடிமக்களுக்காக அரசாங்கம் இயங்குகிறது. மக்களுக்கு தண்ணீர், ரோடு, பாதுகாப்பு, இராணுவம் என பல காரியங்களை செய்ய ஏராளமான பணம் நமது நாட்டிற்கு தேவைப்படுகிறது. எனவே ஒவ்வொரு பிரஜையும் நாட்டின்மேல் அக்கறை கொள்ள வேண்டும். நல்ல வேலைகளைச் செய்து ஏராளமாக, தாராளமாக வரி கட்ட வேண்டும். (Sale Tax, Income Tax, etc.) மற்றவர்களுடைய பணத்தை எடுத்து வரி கட்டக்கூடாது அல்லவா? எனவே, நல்ல மனமுள்ளவர்கள் தேவனுடைய சுவிசேஷ பணிக்கும், அரசாங்கத்திற்கும் தாராளமாக கொடுக்க நல்ல வேலை செய்வோமாக! இதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

எனவே வேதவசனப்படி செயல்பட்டு தேவனுடைய ராஜ்யத்திற்கும், இந்த நாட்டிற்கும் உபயோக முள்ளவர்களாக இருப்போமாக. ஆவிக்குரிய ரீதியில் ஊனமுற்ற நிலை மாறி இந்த உலகத்தில் சாதனையாளர்களாக (உலகத்தை சுதந்தரிப்பவர்களாக ரோமர் 4:13) மாறுவோமாக.

சங். 50:16-19 "தேவன் துன்மார்க்கனை நோக்கி: நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு. சிட்சையை (வேத போதனை) நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய். நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப்போகிறாய், விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு. உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது."

1 கொரி. 5:11 "நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசின னாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது."

கலா. 6:1 "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு."

2 தெச. 3:6 "சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்."

2 தெச. 3:14-15 "மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்." எனவே இந்த வசனங்களின்படி நாம் ஒருவரையும் **குற்றப் படுத்தாமல், மனதில் கூட சத்துருவாய் எண்ணாமல்** எல்லாரையும் நேசித்து, விட வேண்டியதை விட்டு, செய்ய வேண்டியதை செய்து கர்த்தருடைய பணிக்கென்று நமது பணத்தை தாராளமாக செலவிடுவோமாக.

## முடிவுரை:

பழைய ஏற்பாட்டின் **தசமபாகம்** நமக்கு சட்டமாக இல்லாமல் ஒழிந்து போயிற்று என்பதை மிகத்திட்டவட்டமாக வேத வசனத்தின்படி அறிந்தாலும் புதிய ஏற்பாட்டில் நாம் முழுவதும் தேவனுக்கு சொந்தம் 1 கொரி 6:19.20, 1 பேதுரு 1:19 என்ற வேதவசனம் சொல்வதால், தேவனை கனப்படுத்த பரலோகத்தில் பொக்கிஷங்களை (ஆத்துமாக்களை) சேர்க்க சுயாதீனப்பிரமாணப்படி **தசமபாகமோ** (நியாயப்பிரமாண சட்டப்படி அல்ல) அதற்கு மேலாகவோ அல்லது உங்களால் இயன்ற அளவோ (எந்த நிபந்தனையுமல்ல) ஊழியத்தில் கொடுக்க அல்லது ஊழியத்தில் செலவு செய்ய, அல்லது உண்மையும் உத்தமுமாய் வசனத்தை போதிக்கிற ஊழியர்களின் ஊழியத்துடன் இணைந்து செயல்பட. அப்போஸ்தலனாகிய பவுலைப்போல நலமான வேலை செய்வோம், ஜெபிப்போம், கொடுப்போம், வாருங்கள் சேர்ந்து செயல்படுவோம், உலகத்தை சுதந்தரிப்போம் ரோமர் 4:13 பாலும் தேனும் ஓடக்கூடிய வாக்களிக்கப்பட்ட வளமான வாழ்வை, நெய் பொழியும் வாழ்வை சொந்தமாக்குவோம், கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக,

## குறிப்பு

இந்த புத்தகத்தால் பயனடைந்தீர்கள் என்றால் மற்றவர்களும் பயனடையும்படி இன்னும் அநேக புத்தகங்களை வாங்கியோ அல்லது நகல் (Xerox) எடுத்தோ மற்றவர்களும் பயனடையும்படி ஊழியம் செய்ய கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது வேத போதனைகள் (பிரசங்க செய்திகள்) 300க்கும் மேலாக தொடர் போதனையாக உள்ளது. இந்த போதனைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவை, பாடு, மரணம், உயிர்தெழுதல் மூலமாய் ஏற்படுத்தின புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பற்றியதாக இருக்கிறது. இந்த செய்திகளை கேட்டு புரிந்துகொள்வதன் மூலம் இலவமாக பாவமன்னிப்பு, பரிசுத்த வாழ்வு, தேவ

நீதி, பொருளாதார செழிப்பு, வெற்றி வாழ்க்கை, சாத்தான்மேல் அதிகாரம் இவைகளைப் பெற்று சிறப்பாக இந்த பூமியில் வாழ்வதுடன், கர்த்தருக்காக ஊழியம் செய்து பரலோகிலும் பொக்கிஷம் சேர்த்து வைக்கலாம். இந்த போதனைகளை DVD / CD / MP3 இவைகளில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது இணையதளத்திலிருந்து டவுண்லோடு செய்யலாம். அதை மற்றவர்களுக்கும் கொடுத்து ஊழியம் செய்யலாம்.

இணையதளம் : www.fountainoflife.asia (or) www.sfrancis.org மேலும் எனது மற்ற வெளியீடுகளுக்கு என்னோடு தொடர்பு கொள்ளவும்,

கிறிஸ்துவின் பணியில்...

**சகோ. பிரான்ஸிஸ்**

**094447 26464**

# 31, 10th Street,
North Jaganatha Nagar,
Villivakkam, Chennai 49.

**பதிப்பகத்தார் உரை**

இந்நூலின் ஆசிரியர் திரு. **எஸ். பிரான்ஸிஸ்** அவர்கள் கத்தோலிக்க பாரம்பரியத்தில் பிறந்து தேவனை உண்மையாகத் தேடி, இரட்சிக்கப்பட்டு பின்னர் தங்களை பூரண பெந்தெகொஸ்தே சபை என்று அழைத்துக்கொள்ளும் சபையில் இணைத்து கொண்டவர். ஆயினும் ஆவியானவர் அவருக்கு தெளிவாக போதித்த நற்செய்தியின் விசேஷங்களையும், புதிய உடன்படிக்கையின் இரகசியங்களையும் அறிவிப்பதற்காகவே **ஜீவநீருற்று** என்ற விசுவாச ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார். தனது வாழ்க்கையின் முற்பகுதியில் மிக ஏழ்மை நிலையில் இருந்தாலும், பரிசுத்தாவியானவர் போதித்த இரகசியங்களை அறிந்தபின் இவர் ஓர் பெரிய வெற்றியுள்ள தொழில் அதிபராக திகழ்கிறார். **நல்ல தேவன்** ஊழியத்தை தனது சொந்த செலவிலேயே நடத்தி வருகிறார்.

இந்த புத்தகம் **தசமபாகம்** கொடுப்பதை தவறு என்று போதிப்பதற்காக எழுதப்படவில்லை. விடுதலையோடு, நிர்ப்பந்தம் இல்லாமல், குற்ற உணர்வின்றி, தேவ ராஜ்ஜியத்தை கட்டுவதற்காக நமது பணம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே இந்நூலின் கருப்பொருளாகும்.

இச்சிறிய நூலைப் படிக்கும் எந்த ஒரு விசுவாசியும், இயேசு நமக்கு ஏற்படுத்தி வைத்திருக்கும் மகா மேன்மையான ஐசுவரியத்தை முழுமையாக சுதந்தரித்துக்கொள்வதும் அல்லாமல், இதுவரை கொடுத்துவந்ததை பார்க்கிலும், பண்மடங்கு அதிகமாக தேவராஜ்ஜியத்திற்கென்று செலவிடுவார் என்பது மிக மிக நிச்சயம்.